# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட் சகோதரிகள்**

ப்ளாஞ்ச் மேரி OSM, L.T. மேரி CIC, குயின்மேரி CIC – மதுரை; ஜெய மேரி OSM, சந்தோஷமேரி OSM, ரெஜினாமேரி FIHM, ரோஸ்லினா மேரி OSM – திருச்சி; ரொமானா OSM, மரிய ஆரோக் OSM, நேவிஸ் CIC, பொலன்ஷியா OSM, சிரோன் OSM – நெல்லை; சலேத்மேரி, லீலா மேரி OSM – நாகர்கோவில்; இமாக்குலின் மேரி OSM, எர்மானாமேரி OSM, எல்பிட் CIC – திண்டுக்கல்; ஜோசப்பிட்டா மேரி OSM – தஞ்சாவூர்; அல்போன்ஸ் - திருமங்கலம்; லூர்து மேரி CIC, ஐசிந்த் SJC, விண்ணரசி DMI, மேரி செசாரியா SSAM – சென்னை; லோரா மேரி – பிரகாசபுரம்; வித்யா OSM, மார்சலோஸாமேரி OSM – தூத்துக்குடி; ஆரோக்கியம் - அறநூற்றிவயல்; புஷ்பராணி SJC – திண்டிவனம்; ஜெயமேரி CIC – ஆத்தூர்; ஜெயா SJC – மையனூர்; மரிய ஆரோக் - கருத்தப்புலியூர்; எப்ராசியாமேரி, டெனிசா OSM – சேலம்; கரோலாமேரி – சிப்பிக்குளம்; அல்போர்ஜியஸ் - முசிறி; அமபெல்மேரி – காமநாயக்கன்பட்டி; ரெய்மண்ட் SJC, சகாயராணி SJC – கடலூர்; செலின் SJC, சின்னராணி SJC – அணிலாடி.

**பொதுநிலையினர்**

புஷ்பக்கண்ணு – கோவை; சந்தனம், இசபெல்லா ஜெகத்ரட்சகன், இமாக்குலேட் சோபியா, லீமா தெரஸ், பாத்திமா, ஆனி பீட்டர் ராஜ், கிளாரா லூர்து மேரி, டெனிஸ் சில்வானா ரோஸ்லின், செலின்மேரி – திருச்சி; லீலாவதி, அமல செல்வி, சிறிய புஷ்பம், ராஜரீகம் ரபேல், குளோரினா லீனா, மார்கரேட் பெல்சியா, தேன்மொழிரூபஸ், சாந்தாமரியா, அல்போன்சா ஜோதி மேரி, ஆனி ஆஷா, ஜோஸ்பின்மேரி – திண்டுக்கல்; சரோஜினி செசிலியா, மரிய வென்ஸி - சென்னை; அந்தோணியம்மாள் – வேலூர்; ஆண்டோ திவ்யன், அவிவா டேப்னி – திருப்பத்தூர்; வெர்ஜின் லூயிஸ் - திருநெல்வேலி; ஞானாபரணம் - மதுரை; டெய்சி, மரிய ஜோசப் – மயிலாடுதுறை; மேரி - இளையரசனேந்தல்; அமலா டென்னிஸ் - தூத்துக்குடி.

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

**திரு. ராஜரீகம் ரபேல் – திண்டுக்கல்**

**சகோ. அல்போன்ஸ் – திருமங்கலம்**

**Owned and Published by Fr. A. CHINNAPPARAJ OSM from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai - 600097 and Printed by S. THEESMAS at Lilly Soosai Offset, 8, (12/1), Mohamed Husain Lane, Royappettah, Chennai - 600014. Editor: Fr. A. CHINNAPPARAJ OSM.**





ஆசிரியர் பக்கம்

# நிலம்

அருள்பணி. சின்னப்பராஜ் ம.ஊ.ச.,
ஜோதி மாதா ஆலயம், சென்னை.

**இறைஇயேசுவில் அன்புநிறை அன்னைமரி பக்தர்களே!**

மனிதன் உயிர் வாழ இன்றியமையாதத் தேவைகள் மூன்று: உணவு, உடை மற்றும் இருப்பிடம். இவை மூன்றில் முதல் இரண்டு தேவைகளை பிறரோடு தாராள உள்ளத்தோடு பகிர்ந்து வாழ்கின்ற மனிதர்களைப் நாம் பார்த்திருக்கின்றோம். ஏன் அதை நாமும் பல வேளைகளில் செய்திருக்கின்றோம். ஆனால், மூன்றாவது அத்தியாவசியத் தேவையை நாம் பிறருக்கு பூர்த்தி செய்வதுமில்லை; செய்ய நினைப்பதுமில்லை. இதன் விளைவாக இன்றும் பலர் சாலையோரங்களில் தங்களது வாழ்க்கையை கழிப்பதும், மற்றும் புறம்போக்கு இடங்களில் ஒரு சிறிய கூடாரமிட்டு வசிப்பதையும் நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

மனிதனின் இந்த மூன்றாவது அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்ய இன்றியமையாததாக இருப்பது 'நிலம்'. இந்த 'நிலம்' ஐவகைப்படும்: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை. நிலத்தின் மதிப்பு அதன் தன்மையைப் பொறுத்து மாறுபட்டிருக்கும். உதாரணமாக ஒரு நிலமானது வீட்டுமனையாக விற்பனைக்கு வரும்போது அதன் விலை அதிகமாக இருக்கும். ஆனால், அதே நிலம் முற்செடிகளோடும், கற்கள் நிறைந்ததாகவும் இருந்தால் அதன் மதிப்பு சற்று குறைவானதாகவே இருக்கும். இன்று பலருடைய கனவாக இருப்பது 'எப்படியாவது சொந்தமாக ஒரு வீட்டை வாங்கி அதில் வசிக்க வேண்டும்' என்பதுதான்.

## உள்ளே...

| | |
|---|---|
| மனுக்குல மாண்பு மரியா | – 05 |
| திருத்தந்தையின் தேவ தாய்ச் சிந்தனைகள் | – 08 |
| திருஅவையின் குரல் | – 12 |
| பிளவுபட்ட திருஅவைகளை ஒன்றிணைக்கும் மரியியல் சிந்தனைகள் | – 14 |
| நம் தாய் – நம் நாடு | – 17 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | – 20 |
| விவிலிய வினாவிடை | – 27 |
| தூய பனிமய மாதாவின் காட்சிகள் | – 29 |
| ஜீவமாதாவிடம் ஜீவன் வேண்டி | – 31 |

இதற்காக இரவு பகல் என்று பாராமல் உழைத்து நிலத்தை வாங்கி, வீட்டை தானே வடிவமைத்து கட்டி அதில் வசிக்கும்போது அவன் அடைகின்ற நிம்மதியை வார்த்தைகளால் விவரிக்கவே முடியாது.

மேலும், நம்மிடையே இந்த உணவு மற்றும் உடைக்காக வராத சண்டைகள் நிலத்திற்காக வருகின்றன. இந்த 'நிலத்திற்காக' பலரும் தங்கள் உடன்பிறந்த சகோதர சகோதரிகளோடு சண்டையிட்டு நீதிமன்ற வாசலில் நீதிக்காக காத்திருக்கின்றனர்! காரணம் நமக்கென்று 'நிலம்' இருக்கும்போது இங்கும் அங்கும் என்று திரியாமல் ஒரு இடத்தில் நிம்மதியான வாழ்க்கை வாழலாம் என்பதே. இது ஒருபுறம் இருக்க நம்மிடையே பிறரை ஏமாற்றி அவரது நிலங்களைக் கையகப்படுத்தும் மனிதர்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்நிலையில் நம் தாய் மரியா ஒரு 'நிலத்திற்கு' ஒப்பிட்டுப் பார்க்க விழைகின்றேன். நாம் நினைப்பதுபோல் இந்த உலகச் செல்வத்தைப் போன்றதல்ல இந்த நிலம். மாறாக, தமது உடல் என்னும் 'நிலம்'. இயேசு தமது போதனையில் (விதைப்பவர் உவமையில் - மத் 13:1-9) கூறியிருப்பதுபோல நாம் ஒவ்வொருவரும் இறைவார்த்தையை ஏற்கக்கூடிய 'நிலமாக' வாழ வேண்டும். அன்னை மரியா இந்த இறைவார்த்தையை தமது உடல் என்னும் 'நிலத்தில்' ஏற்று அதற்கு உருக்கொடுக்கின்றார். அந்த உருதான் 'இயேசு கிறிஸ்து' – வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார்.

நல்ல நிலங்களிலேயே எல்லா நிலங்களும் முழுமையான விளைச்சலைத் தருவதில்லை. ஒருசில 30 மடங்காகவும், ஒருசில 60 மடங்காகவும் மற்றும் ஒருசில 100 மடங்காகப் பலன் தருகின்றன. இவ்வாறு பலன் தர முதலில் 'நிலத்தைப்' பண்படுத்த வேண்டும். நமது உள்ளங்களில் இருக்கின்ற தேவையற்றவைகளைக் களையும்போது நாம் பண்பட்ட நிலங்களாகவும், இறைவார்த்தையை என்னும் விதையை ஏற்கின்ற நல்ல நிலங்களாகவும் மாறுவோம். அவ்வாறு ஏற்பதோடு மட்டுமல்லாமல், அன்னைமரியாவைப் போன்று அதனை வாழ்வாக்கும்போது நாமும் அவ்வார்த்தைகளுக்கு உருக்கொடுப்போம்.

இறைவனின் வார்த்தைகள் நம்மில் வேரூன்ற வேண்டுமானால், உலகச் சுகங்கள் குறித்த ஆசைகளிலிருந்து நாம் வெளிவர வேண்டும் அதிலும் பிறரை ஏமாற்றி சம்பாதிக்கும் எண்ணம் நம்மிடமிருந்து அகல வேண்டும். அன்னைமரியாவைப் போன்று இறைவார்த்தை எனும் விதைகளை ஏற்றுக்கொண்டு நமது சக்திக்கு ஏற்றாற்போலும், சூழ்நிலைக்குத் தகுந்தாற்போலும் பலன்தர, நம் இதயங்களை சுத்தப்படுத்தி, திறந்து வைப்போம். இதற்கு அன்னைமரியா நமக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து, நம்மை வழிநடத்தி, நாமும் பலன்தர உதவுவாராக!





## மகப்பேறு வேண்டி ஜெபம்

அதிசயங்களையும் அற்புதங்களையும் அன்றாடம் நிகழ்த்தும் எம் இறைவா, வாழ்வின் ஊற்றும் தொடக்கமும் நீரே. மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்தீர். திருமணத்தினால் குடும்பமாக வாழ அவர்களை இணைத்தீர். நீர் எம்மீது வைத்திருக்கும் அன்பின் வெளிப்பாடாகவும், தம்பதியர் ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பின் அடையாளமாகவும் குடும்பங்களைக் குழந்தைச் செல்வத்தினால் ஆசீர்வதிக்கின்றீர். குழந்தையின்றித் தவித்த அன்னாள், எலிசபெத் ஆகியோரின் மீது மனமிரங்கி, அவர்களுக்குக் குழந்தை வரம் தந்தீர். அதுபோல, இன்று குழந்தையின்றித் தவிக்கும் தம்பதியர் ஒவ்வொருவர் மீதும் உமது கருணையைப் பொழியுமாறு நாங்கள் உம்மை வேண்டுகிறோம்.

இறைவா, உம்மால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதை நாங்கள் விசுவசிக்கின்றோம். இறந்த உடலுக்கு உயிர் கொடுக்கும் ஆற்றலும், வறண்ட நிலத்தை வளப்படுத்தும் வல்லமையும் நிறைந்தவர் நீர். எம் தாய் ஜீவ மாதாவின் பரிந்துரையின் வழியாக, குழந்தைப் பாக்கியம் வேண்டி நம்பிக்கையோடு உம் திருமுன் நிற்கும் இத்தம்பதியர் மீது மனமிரங்கி இவர்களுக்குக் குழந்தைப் பாக்கியம் தந்து ஆசீர்வதித்தருளும். உமது அருளால் இவர்கள் பெறும் குழந்தைகளைத் தெய்வ பயத்திலும், ஞானத்திலும், விசுவாசத்திலும், நற்பண்பிலும் வளர்க்கத் தேவையான ஆற்றலையும் அருளையும் தருவீராக. இதனால் நாங்கள் என்றும் உமக்கு நன்றியுள்ளவர்களாக வாழ்ந்து உம்மை மகிமைப்படுத்துவோமாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

### செப உதவிக்குத் தொடர்பு கொள்க

அலைபேசி: 9976436474, 9566070161
மின் அஞ்சல்: jeevamatha2011@gmail.com, jeevamatha2011@hotmail.com
கடிதம்: Fr.Parish Priest
Parameswaran Nagar
Sholinganallur
Chennai – 119

**3. நான்சி – சைதாப்பேட்டை, சென்னை**

நான் பல வருடங்களாகச் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு மருந்துகள் எடுக்கிறேன். ஜீவமாதாவின் ஆலயத்திற்கு தவறாமல் வந்து செபித்ததன் பலனாக இப்போது எனது நோய் முழுவதுமாக குணமாகியிருக்கின்றது என்ற மருத்துவர்கள் என்னை பரிசோதித்தப்பின்பு கூறியிருக்கிறார்கள். நம்பினோரைக் கைவிடாத ஜீவமாதாவுக்கு கோடான கோடி நன்றிகள்.

**4. ஷாலினி – குமரன் நகர், சென்னை**

எங்களுக்குத் திருமணமாகி 3 வருடங்களாகியும் குழந்தையில்லாமல் இருந்தோம். பல சிகிச்சைகள் மேற்கொண்டோம், பலனில்லை. இறுதியாக இந்த ஜீவமாதா ஆலயத்திற்கு வந்து செபித்து சென்றோம். இப்போது நான் 5 மாத கர்ப்பிணியாக இருக்கின்றேன். சுகப்பிரசவம் அடைய அன்னையின் அருளை நாடி நிற்கின்றேன். ஜீவமாதாவுக்கு நன்றிகள்.

**5. ரமனி – கேளம்பாக்கம், சென்னை**

எனது மகனுக்கு கடந்த 3 மாதமாக தலைவலி, காய்ச்சல், வயிற்றுவலி மற்றும் பல நோய்கள் இருந்ததால் நாங்கள் குழப்பத்திலும், வறுமையிலும் வாடினோம். அன்னையின் ஆலயத்திற்கு வந்த ஓரிரு வாரங்களில் எங்கள் பிரச்சனைகள் அனைத்தும் நீங்கி நாங்கள் நலமாக வாழ்கிறோம். அன்னைக்கு கோடி நன்றிகள்.

**6. வித்யா – வண்டலூர், சென்னை**

எனக்குத் திருமணம் முடிந்து 3 வருடங்கள் ஆகியும் குழந்தைப் பாக்கியம் இல்லாததால் மிகவும் மன வேதனைக்கு உள்ளானேன். ஜீவமாதாவின் அருளால் எங்களுக்குக் குழந்தை வரம் கிடைத்தது. குழந்தை பிறந்த 6 மாதத்தில் உடல்நிலை சரியில்லை. மருத்துவரிடம் சென்றபோது இதயத்தில் ஓட்டை இருப்பதாகக் கூறினார்கள். குழந்தையை அன்னையின் பாதத்தில் வைத்து செபித்துவிட்டுச் சென்றோம். மருத்துவர்கள் மீண்டுமாக பரிசோதித்துவிட்டு குழந்தை நலமாக இருப்பதாகத் தெரிவித்தார்கள். கோடி அற்புதங்கள் நிகழ்த்தும் ஜீவ தாய்க்கு நன்றிகள்.

**7. தெரசா – திருவெற்றியூர், சென்னை**

எங்களுக்குத் திருமணம் முடிந்து 10 ஆண்டுகளாகக் குழந்தை வரத்திற்காக ஏங்கி தவித்தோம். பல மருத்துவர்களிடம் சென்றோம், சிகிச்சைகள் பெற்றுக்கொண்டோம். ஆனால், பலன் எதுவுமின்றி ஏமாற்றம் அடைந்தோம். பலமுறை திருயாத்திரைகள் மேற்கொண்டோம், எத்தனையோ கோவில்களுக்குச் சென்றோம். எந்தவித பலனுமின்றி சோகத்தில் எங்கள் வாழ்க்கை மூழ்கியிருந்தது. இந்நிலையில் இந்த ஆலயத்திற்கு வந்து செபித்தோம். இப்போது எங்களுக்கு குழந்தை வரம் கிடைத்தது. எங்கள் கண்ணீரைப் போக்கி மகிழ்ச்சியான வாழ்வளித்த ஜீவமாதாவுக்கு கோடி நன்றிகள்.

**8. ஹரிகிருஷ்ணன், கீதாஞ்சலி**

கடந்த 2 வருடங்களாகக் குழந்தையில்லாமல் மனவிரக்தியில் வாழ்ந்தோம். என் சகோதரர் ஒருவர் இந்த ஆலயத்திற்கு வந்து எங்களுக்காகச் செபித்தார். பின்பு நாங்களும் வந்தோம். எங்களுக்கு இப்போது குழந்தைப் பிறந்திருக்கின்றது. அண்டி வருவோர்க்கு ஆறுதல் தரும் ஜீவமாதாவுக்கு நன்றி.







# மனுக்குல மாண்பு மரியா

8

அருள்பணி. ஜான் ரொன்காலி ம.ஊ.ச.
ஜெகன் மாதா பிரையரி, திருச்சி.

## மகிமையின் முதற்கனி மரியாள்

**முன்னுரை**

மனிதரில் மணிமகுடமாக விளங்குபவள் அன்னை மரியாள். இவள் மனிதர் அனைவரின் ஒருமித்த குரலாக படைத்தவன் இறைவனுக்கு பணிவுடன் பதில்கொடுத்தவள். ஈராயிரம் ஆண்டுகள் கடந்தும் மனுக்குலத்தின் உரைக்கல்லாக, மாண்பிற்கு இலக்கணமாக, மனித மீட்பின் நேரடி நிலைப்பாடாக இருக்கின்றவள் மரியாள். அவளை மதிப்போருண்டு, மதியாததுபோல் உரைப்போருண்டு, ஆனால் மனமறிந்தும், மறந்தும்கூட மறுப்பவர் மிகமிகக்குறைவு. ஏன்? காரணம் இவள் பணிந்தவள். பரமனின் குரலுக்கு "ஆகட்டும்" என்று பாங்குடன் பணிந்தவள். இதுகுறித்து பழைய புதிய ஏற்பாடுகளிலிருந்து ஒருசில மேற்கோள்களோடு விரிவாகப் பார்ப்போம்.

**சீனாய் மலையில் உடன்படிக்கை**

மரியாளுக்கு வழங்கப்பட்ட மங்கள அறிவிப்பு நிகழ்ச்சியானது, பழைய ஏற்பாட்டில், விடுதலைப்பயண நூலில், இஸ்ராயேல் மக்களுடன் இறைவன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை நிகழ்ச்சியை ஒத்திருக்கின்றது. மோசே வழியாக மக்களுடன் பேசிய இறைவன், மரியாளுடன் கபிரியேல் தூதன் வழியாகப் பேசுகின்றார். மக்கள் அனைவும் ஒரே குரலில் "அவர் சொல்வதையெல்லாம் செய்வோம்" என்றார்கள். ஆனால் அதன்படி நடந்தார்களா? கேள்விக்குறிதான். அவர் என்ன சொன்னார்? 10 கற்பனைகள். அவற்றை அவர்களால் கடைப்பிடிக்க முடிந்ததா என்பதும் கேள்விக்குறியே.

ஆனால் மரியாளின் சம்மதம் சக்தி வாய்ந்தது. ஏனெனில் அது உண்மையுள்ளது. உறுதியானது. ஊக்கம் நிறைந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, தான் சொன்ன சம்மதம், அதன் ஏற்ற இரக்கம் அத்தனையும் அவளுக்குத் தெரியும். எல்லாம் வல்ல இறைவனின் வல்லமையில் ஏற்றமிகு நம்பிக்கைவைத்து பணிவுடன் பதில் கொடுத்தாள்.

**<u>மரியாளின் சம்மதம், மகிழ்ச்சி தருவது.</u>**

"இதோ ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் வாய்ப்புப் பெற்றதெப்படி? இதோ உன் வாழ்த்து என் காதில் ஒலித்ததும் என் குழந்தை வயிற்றினுள்ளே பேருவகையில் துள்ளியது" என்றாள். இறைத்திருவுளம் அறிந்ததும், அவரது திருச்சித்தம் நிறைவேற்ற அனைத்து நிலைகளிலும் ஆகட்டும் என்று பணிந்து மகிழ்ந்தவள் அன்னை மரியாள். அதனால்தான் எலிசபெத்தைச்சந்திக்கச்சென்று அவளிடமிருந்து ஆண்டவரின் தாய் என்ற அங்கீகாரம் கிடைத்ததும், ஆண்டவரை எனது உள்ளம் ஏற்றிப்போற்றுகின்றது என்று பாடினாள்.

**மரியாளின் சம்மதம் ஆச்சரியம் தருவது.**

மரியாள் சொன்னாள், “இதோ ஆண்டவரின் அடிமை. உமது வார்த்தையின்படியே எனக்காகட்டும்” என்றாள். அன்று மட்டுமல்ல, அன்றுமுதல் என்றுமே அந்தப் பதிலிலிருந்து அவள் தடம் மாறவில்லை. அதனால்தான் எலிசபெத்து சொல்வார், “ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும் என்று விசுவசித்தவள் பேறுபெற்றவள்” என்று. ஏன் எலிசபெத்து இதனைச் சொல்லவேண்டும்? காரணம், சிறு பிள்ளையாக இருந்தாலும், தனது தாய்மையனுபவத்திற்கு முன்னுதாரணம் இல்லையென்றாலும், அன்பன் இயேசுவுக்குத் தாயாகவேண்டுமென அழைக்கப்பட்டபோது, அதற்கான தெளிவுகள் கிடைத்துவிட்டபோது, மரியாள் ஆண்டவரின் திட்டம் தன்னில் நிறைவேறட்டும் என்று பணிந்தாள். ஆனால், ஒரு குருவாக இருந்தும், வரலாற்றின் பல நிகழ்வுகள் தெரிந்திருந்தும், தனக்கென ஒரு வாரீசு வேண்டுமெனத் தொடர்ந்து வேண்டிக்கொண்டிருந்தும், சக்கரியா, ஆண்டவர் யோவான் குறித்து வாக்குறுதி சொன்னபோது நம்பவில்லை. எனவே ஊமையாக ஒரு மூலையில் அமர்ந்திருந்தார். அவரைக்கண்டு ஆதங்க உணர்வுகளுடனும், மரியாளின் மனப்பக்குவம் குறித்து ஆச்சரியத்துடனும், எலிசபெத்து ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும் என்று விசுவசித்தவள் பேறுபெற்றவள் என்று வாழ்த்துகின்றாள். ஏனெனில் மரியாள் மாண்புமிகு மெசியாவின் திருவுறைவிடம்.

**திருவுறைவிடம்.**

பழைய ஏற்பாட்டிலே பார்கிறோம், “அவர்கள் நடுவிலே நான் வாழ எனக்கென ஒரு பரிசுத்த இடத்தை நீ ஏற்படுத்துவாயாக” (வி.ப. 25,8). ஆதிகாலம் முதல் நோவா காலம்வரை ஆவியாகவும், அனைத்து இடங்களிலும் வாசம்செய்பவராகவும் இருந்த இறைவன், நோவா காலம்முதல் ஆபிரகாம் காலம் வரை தான் படைத்த மனிதரில் மாண்புள்ளவர்களைத் தேடிக்கொண்டிருந்த இறைவன், ஆபிரகாம் காலம்முதல் அதன்பின் இஸ்ராலேயரின் விடுதலைக்காலம் வரை பலவழிகளில் தனது மேன்மைகளை உணர்த்திக்கொண்டிருந்த இறைவன், பாலைவனம் கடந்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் மக்கள் நுழைந்து தங்கள் தனித்தன்மையை உணரத்தொடங்கியபோது, தான் தேர்ந்துகொண்டபிள்ளைகளை நினைத்து அவர்களோடு வாழவிரும்பி தனக்கென ஒரு ஆலயத்தை நிறுவவைத்தார். அத்திருத்தலமே ஆராதனைக்கூடமாக விளங்கியது.

அந்த ஆலயத்தின் அமைப்பு மூன்று பிரிவுகளாகவிருந்தது என்று அறிவோம். **வெளிப்பிரகாரம், பலிசெலுத்தும் பரிசுத்த இடம், மகாபரிசுத்த இடம்** (உடன்படிக்கைப் பேழையின் இருப்பிடம்). இந்த உடன்படிக்கைப்பேழை, சீனாய் பிராந்தியத்தில் இறைமாட்சியின் வெளிப்பாடு முதல், இஸ்ராயேலரின் கடினமான பாலைவனப் பயணத்தின்போதும், வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் அவர்கள் நுழைந்து அதனை சொந்தமாக்கிக்கொண்டபோதும், அவர்களால் எல்லா இடங்களுக்கும் சுமந்துசெல்லப்பட்டது. கானானில் அவர்கள் அமைத்துக்கொண்ட வாழ்க்கையின்போது அவர்களின் சமய, கலாச்சார மற்றும் சமூகத்தின் மையமாகவே உடன்படிக்கைப் பேழை வைக்கப்பட்டிருந்த கூடாரம் திகழ்ந்தது.

தாவீது அரசன் விரும்பி, சாலமோன் வழியாக நிரந்தர ஆலயம் நிர்மாணிக்கப்பட்டபோது, நெறிமுறைகள் நிரந்தரமாயின. இரண்டாவது ஆலயத்தை எஸ்றார், நெகேமியா போன்றவர்கள் பாபிலோனிய விடுதலைக்குப்பின் கட்டினார்கள்.







# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



அருட்பணி. வியாகுலம்
ம. ஊ. ச.
சென்னை

**“உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு தந்த வாக்குறுதியின்படி உனக்கு ஆசி வழங்குவார்” (இச 15:8).**

குழந்தை வரம் பெற்றுத்தரும் ஜீவமாதாவின் பக்தர்களே! ஜூலை மாதம் முதல் தேதி, மாதத்தின் முதல் சனிக்கிழமை ஜீவமாதாவிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். அருள்பணி பெர்னார்டின் ம.ஊ.ச அவர்கள் தலைமையேற்று திருப்பலி ஒப்புக்கொடுத்து மக்களுக்கு இறையாசியைப் பெற்றுத் தந்தார். பலரும் குடும்பங்களாக வந்து செபமாலை செபித்து, திருப்பலியில் பங்கேற்று மற்றும் குணமளிக்கும் நற்கருணை ஆராதனையில் முழுமையாகப் பங்கேற்று இறைவனது ஆசியைப் பெற்று சென்றனர். ஒருசிலர் தாங்கள் பெற்றுக்கொண்ட இறையருளுக்காக நன்றிகூறி சாட்சியங்களாகப் பதிவு செய்தனர். அவைகளில் ஒரு சில இதோ:

**1. ஆக்னஸ் மேரி, சேவியர் விமல் – கண்ணகிநகர், சென்னை**

எங்களுக்குத் திருமணமாகி 2 வருடங்களாகக் குழந்தையில்லாமல் மிகவும் மனவேதனைக்கு உள்ளாகியிருந்தோம். பல மருத்துவர்களிடம் சென்று பரிசோதனை செய்தும் பலனில்லாமல் வாழந்தோம். ஜீவ மாதா ஆலயத்திற்கு தவறாமல் வந்து கண்ணீரோடு குழந்தை வரத்திற்காகச் செபித்து சென்றோம். இந்த ஆண்டு எங்களுக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்திருக்கின்றது. எங்கள் கண்ணீரைத் துடைத்த ஜீவமாதாவுக்கு கோடி நன்றிகள்.

**2. அன்புக்கரசி – சென்னை**

எனக்குத் திருமணம் முடிந்து 2 வருடங்களாகக் குழந்தை இல்லை. இதனால் பலரும் என்னை வார்த்தைகளால் காயப்படுத்தினர். மனவேதனையாலும் குழப்பத்தாலும் என் வாழ்க்கை நிம்மதியின்றி இருந்தது. இதனால் என் கணவரோடும் பிரச்சனை மற்ற உறவினர்களும் என்னை ஏளனமாகப் பார்க்கத் தொடங்கினர். இந்நிலையில் ‘ஜீவமாதா செபம்’ எனக்கு கிடைத்தது. இடைவிடாமல் செபித்து இப்போது ஒரு குழந்தை பிறந்திருக்கின்றது. எனது அவமானங்களை அகற்றி மகிழ்ச்சியான வாழ்வை அளித்த ஜீவமாதாவுக்கு நன்றிகள்.

வெண்பனி பெய்து, அந்த பனிகட்டியானது கோயில் கட்டப்படவேண்டிய இடத்தின் எல்லையைக் குறிப்பிடும் வகையில் இருந்ததைக் கண்டு வியப்படைந்தார்கள். வெப்பம் மிகுந்த அந்த கால சூழ்நிலையில், வெண்பனிக்கட்டியை அங்கு பார்த்து அவர்கள் அந்த பனிமய அன்னையின் புதுமையை உணர்ந்தார்கள். அந்த இடத்திலேயே 1886 ஆம் ஆண்டு ஒரு ஆலயம் கட்டி பனிமய அன்னைக்கு அந்த ஆலயத்தை ஒப்புக்கொடுத்தார்கள்.

1939 மார்ச் 29 ஆம் நாள் மாலை 6.30 மணிக்கு, பனிமய அன்னை அந்த ஆலயத்திற்கு அருகிலுள்ள ஒரு குன்றின் மீது காட்சியளித்து, கள்ளிகுளம் கிராமத்தை ஆசிர்வதித்தார். இந்த அன்னை மரியின் காட்சியியை, அந்த கிராமத்தைச் சேர்ந்த ஆறு இளைஞர்கள் கண்டார்கள். பல்வேறு நோய்களினாலும், துன்பங்களினாலும் அவதியுறும் மக்களுக்கு கள்ளிகுளம் பனிமய மாதா பல புதுமைகளைச் செய்து வருகிறார். கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாது, பிற மதத்தைச் சேர்ந்த மக்களும், கள்ளிகுளம் சென்று அன்னைமரியின் வேண்டுதலால், பல புதுமைகளை தங்கள் வாழ்க்கையிலே அனுபவித்து மகிழ்கிறார்கள்.

**தூத்துக்குடி பனிமய மாதா (1582)**

தமிழ்நாட்டிலே மற்றும் ஒரு மிகப்பெரிய, பழமை வாய்ந்த பனிமய ஆலயம், முத்துக்குளி நகராம் தூத்துக்குடியில் உள்ளது. போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த குருக்கள் 1535-1537 ஆம் ஆண்டுகளில் தூத்துக்குடியை சுற்றிய கிராமங்களில் 30,000 பேர் கிறிஸ்தவர்களாக மதம் மாறினர். 1542 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தூய பிரான்சிஸ் சவேரியார் தூத்துக்குடியில் மறைபரப்புப் பணி செய்து, மக்களை இறைவிசுவாசத்தில் உறுதிப்படுத்தினார்.

1538 ஆம் ஆண்டு அருட்திரு பேதுரு கொன்சால்வஸ் என்பவர் பலரை கிறிஸ்தவர்களாக மாற்றியதோடு, அங்கு ஒரு ஆலயம் கட்டி, தூய பேதுரு ஆலயமாக அதை அர்ச்சித்தார். 1582 ஆம் ஆண்டு, சேசுசபை குருக்கள், இந்த ஆலயத்தை 'பனிமயமாதா ஆலயம்' என்று அறிவித்து, ஆகஸ்ட் 5 ஆம் நாள் திருவிழா கொண்டாடினர். போர்த்துக்கீச மொழியில் Das Navis=பனி என்னும் வார்த்தையானது, தமிழில் பாவிக்கப்பட்டு, 'தஸ்நேவிஸ் மாதா' என்று இறைமக்கள் அன்னை மரியாவை அழைக்க ஆரம்பித்தனர். இந்த பேராலயத்தில் பல நூற்றாண்டுகளாக பல புதுமைகள் நடந்து வருகிறது. அருட்தந்தை பிரான்சிஸ் வாயில் என்னும் சேசுசபை குரு, பனிமய மாதா செய்த புதுமைகள் பற்றி, 1709 ஆம் ஆண்டு ஒரு சில குறிப்புகள் எழுதியுள்ளார். இன்னும் பல்வேறு அற்புதங்களும், புதுமைகளும் நடக்கின்றன.

கானாவூர் திருமணத்தில் தனது மகனிடம் பரிந்து பேசிய அதே மரியா, இன்றும் நமக்காக இறைவனிடம் பரிந்து பேசுகிறார். அந்த அன்னை மரியின் அடிச்சுவட்டை பின்பற்றி நாமும் இறையருள் பெற்று, மகிழ்வுடனும் இறைசமாதானத்துடனும் நாம் வாழ முயற்சிப்போம்.





மூன்றாவது ஆலயத்தை இயேசுவின் காலத்திற்கு சற்று முன்னதாக ஏரோது அரசன் ஏறக்குறைய 46 ஆண்டுகளில் கட்டி முடித்தான். மக்களுக்கு எத்தனை பாதிப்புக்கள், அழிவுகள் வந்தாலும், ஆலயத்தின் மையமாக உடன்படிக்கைப்பேழையும் நினைவுகளுமே இருந்தன.

காலம் கடந்தது, வரலாறும் வளர்ந்தது. இடங்களல்ல, மனங்களே மாபரன் வாழும் ஆலயம் என்று மக்கள் புரிந்துகொண்டார்கள்.

காலம் நிறைவுற்றபோது, கடவுள் தன் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பிடத் திட்டமிட்டபோது, தன் மகனைத்தாங்கி, கருதந்து, கருவுக்கு உரு தந்து, கண்ணியமாக வார்க்கவும் வளர்க்கவும், அழகிய உயிர் ஒன்றைத்தேடி, அதனை மரியாளாகக் கண்டுபிடித்தார். முற்காலத்தில் மலைகளிலும், மனிதர் கட்டிய இடங்களிலும் வாசம்செய்த இறைவன், இயேசுவை புதிய நற்செய்தியாக வெளிப்படுத்தியபின்பு, மனிதர் கட்டிய கலைக்கூடங்களில் வாழ்வதைவிட, அவர்களது உள்ளங்களிலேயே வாசம்செய்ய விரும்புவதைக் காண்கிறோம். ஆவியிலும் உண்மையிலும், நமது உள்ளமெனும் ஆலயத்தில் குடிவைத்து அவரை வழிபடவேண்டுமென விரும்பினார். திப. 17,24. இந்த விருப்பம் நிறைவேறவேண்டுமானால், மனிதர் மாண்புபெறவேண்டும், அவர்கள் மீட்புப்பெறவேண்டும். இந்த மீட்புத்திட்டத்தில், தன் மகனுக்கு மரியாள் மாண்புடன் ஒத்துழைக்கவேண்டும் என்பதெல்லாம், மாபரனின் மறைமுகத்திட்டங்கள். இதனைத்தான் தூய பவுலடியார் தனது போதனைகளில் கூறுவார்,

- நீங்களே தேவனின் ஆலயம் 1கொரி. 3,16.
- உங்களது உடல் தேவனின் மாட்சிமிகு ஆலயம் 1 கொரி. 6,19.
- நீங்கள் தேவனுடைய வாழ்விடம் தி.வெ. 21,3.
- நீங்கள் இறைவனுடைய வீடு எபி. 3,6.

இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, நீதிமான்களாய் வாழ்கின்றவர்கள், தங்களது உடல் பொருள் ஆவி மற்றும் ஆன்மா அனைத்தின் மூலமாக ஆண்டவனை மகிமைப்படுத்தி ஆராதனை மூலமும் தங்களின் அழகிய அர்ப்பணத்தின் மூலமும். ஆர்ப்பரிக்கின்றார்கள். முற்காலம்போல எருசலேமிலும் சமாரியாவிலுமல்லாமல். உலகமுழுவதும் அவரைக் கண்டுகொள்ளும் பேற்றை பெருமையை அவரே அடியவர்க்குத் தருகின்றார். முழு உள்ளம், முழு வலிமையோடு இறைவனை இதயத்தில் வழிபடவேண்டியவர்கள் நாம் (மாற்கு 12,30). இறைவனால் மீட்கப்பட்டவர்கள், திரும்பவும் ஆனந்த களிப்புடன் பாடிக்கொண்டு சீயோனுக்கு வருவார்கள். நித்தியமும் நிரந்தரமுமானதுமான மகிழ்ச்சி அவர்கள் தலைமேலிருக்கும். அவர்கள் அளவிலா சந்தோஷமும் மகிழ்சியும் அடைவர்கள். சலிப்பும் சஞ்சலமும், தவிப்பும் தளர்வுகளும் ஓடிப்போகும் என்று எசா. 35, 10 ல் அறிகிறோம்..

எனவேதான் அன்னை மரியாளின் உலகவாழ்வின் இறுதியிலே அன்னை மகிமையோடு விண்ணகம் எடுத்துக்கொள்ளப்பட்டாள் என்று திருச்சபை கொண்டாடுகின்றது. மகிமையில் நுழைந்தவள், தான் மட்டுமல்ல, தனது பிள்ளைகளான மாந்தர் அனைவருமே அந்த மகிமையிலே வாழமுடியும், வாழவேண்டும் என்று அனைவரையும் தொடர்ந்து இவ்வவனியிலே அன்போடு அரவணைத்து வழிநடத்துபவள். அம்மா நீ வாழ்க, வாழ்க, மகிமையோடு வாழ்க.

# திருத்தந்தையின் தேவதாய்ச் சிந்தனைகள்



அருட்பணி. அமல்
ம.ஊ.ச.
உரோமை

## பிரிந்த சகோதரர்களும் அன்னை மரியாளும்

### திருத்தந்தை புனிதர் இரண்டாம் அருள் சின்னப்பர்

1. திருச்சபைக்கும் அன்னை மரியாவுக்கும் இடையேயான உறவை விவரித்த பிறகு, இரண்டாம் வத்திக்கான் சங்கமானது கத்தோலிக்கச் சமூகத்தைச் சேராத கிறிஸ்தவர்களாலும் கன்னி மரியாள் பெருமைப்படுத்தப்படுகிறார் என்பதை அறிவதில் மகிழ்கின்றது. “இது பிரிந்த சகோதரர்களுக்கிடையிலும் ஆண்டவர் மற்றும் மீட்பருடைய தாய்க்கு உரிய மதிப்புத் தருகின்றவர்கள் இருக்கிறார்கள் என்பது இந்தப் புனிதப் பேரவைக்கு பெரு மகிழ்ச்சியையும் நிம்மதியையும் தருகின்றது...” (*Lumen Gentium*, n. 69; *Redemptoris Mater*, nn.29-34). இதன் பின்னணியில், மரியாவுடைய தாய்மை கிறிஸ்தவர்களிடையே பிரிவினையை உண்டாக்குவது வருத்தத்திற்குரியதாக இருந்தாலும் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான பயணத்தின் மிகப்பெரிய நம்பிக்கையையே முன்னிறுத்துகின்றது.

அநேக ப்ராடஸ்டன்ட் குழுக்கள் (Protestant communities), ஒரு குறிப்பிட்ட கருத்தியல்களான, அதாவது, அருள் மற்றும் திருச்சபையியல் (Conception of Grace and Ecclesiology) காரணமாக அன்னை மரியாளின் கொள்கைத் திரட்டு (Marian Dogma) மற்றும் மரியாள் பக்தி (Marian Devotion) இயேசுவினுடைய மீட்புப் பணியில் மரியாளின் பங்களிப்பு அல்லது ஒத்துழைப்பு இவற்றில் எதிரெதிரே நின்றாலும், கிறிஸ்துவினுடைய தனிப்பட்ட இடைநிலையைத் தவறாகப் புரிந்துகொள்ளச் செய்கின்றது என்கின்றன. இதன் பார்வையில், மரியாள் பக்தியானது இயேசுவுக்குக் கொடுக்கின்ற மரியாதையோடு போட்டி போடும்.

2. இருந்தாலும், கடந்த சில ஆண்டுகளில், முதல் மறுமலர்ச்சியாளர்களுடைய (first reformers) சிந்தனைகளை மையப்படுத்திய ஆய்வு, கத்தோலிக்க கொள்கையின்மீது அவர்களுடைய திறந்துபட்ட நிலைப்பாட்டை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தது. உதாரணமாக, மார்ட்டின்





# தூய பனிமய மாதாவின் காட்சிகள்

அருள்பணி. டெனிஸ் ம.ஊ.ச.,, உரோமை.

கடந்த ஈராயிரம் ஆண்டு கால திருச்சபை வரலாற்றிலே அன்னை மரியா, பல்வேறு இடங்களில் பல்வேறு முறைகளில் காட்சியளித்து இறையரசின் நற்செய்தியை அறிவித்து பல்வேறு புதுமைகளைச் செய்து வருகிறார் என்பதை நாம் அறிவோம். அத்தகைய மரியின் காட்சிகளில், பனிமய அன்னை செய்த புதுமை ஒரு வித்தியாசமான ஒன்று. திருச்சபை வரலாற்றிலே மிகப் பழமையான பாரம்பரியத்திலே இடம்பெற்று உலகெங்கும் ஆகஸ்ட் 5 ஆம் நாள் கொண்டாடப்படும் இந்த பனிமய அன்னையைப்பற்றி மிகவும் சுருக்கமாக இந்த கட்டுரையிலே காண்போம்.

**உரோமையில் பனிமய மாதா பேராலயம்**

கி.பி. 431 ஆம் ஆண்டு மரியா ‘இறைவனின் தாய்’ என்னும் மறைக்கோட்பாட்டை எபேசு நகரில் நடந்த திருச்சங்கம் உலகமெங்கும் பிரகடனப்படுத்தியது. அதன் நினைவாக மூன்றாவது சிக்ஸ்தூஸ் என்னும் திருத்தந்தை ஒரு பேராலயம் எழுப்ப விரும்பினார். அப்போது, ஆகஸ்ட் 5 ஆம் நாள் உரோமை நகரில் ஒரு இடத்தில் பனி பெய்து வெண்மைபடந்த நிலமாக அந்த இடத்தை மாற்றி, இந்த இடத்தில்தான் பேராலயம் கட்ட வேண்டுமென்று செய்தி அளிக்கப்பட்டது. அந்த இடத்தில்தான் உரோமை நகரில், St. Mary Major Basilica என்னும் பேராலயம் கட்டப்பட்டது. பனிமய அன்னையின் இந்த பேராலயத்தில், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும், இன்றும் கூட ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 5 ஆம் நாள் மிகப்பெரும் விழா கொண்டாடப்படுகிறது. மிகவும் வெப்பம் மிகுந்த ஆகஸ்ட் மாதத்தில், வெண்பனி பொழிவது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு புதுமை. இந்த தூய்மையான வெண்பனியானது, அன்னை மரியாளின் தூய்மைக்கு ஒரு அடையாளம்.

**கள்ளிகுளம் பனிமய மாதா (1884)**

நமது தமிழ் மண்ணிலும், பனிமய மாதா காட்சி கொடுத்து புதுமைகள் புரிந்து வருவது நம் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான செய்தி. சேசுசபை துறவிகள் பணி செய்து வந்த கள்ளிகுளம் என்னும் ஊரில், 1884 ஆம் ஆண்டு ஒரு கோயில் கட்ட விரும்பிய போது, எந்த இடத்தில் கட்டுவது என்று அவர்களுக்கு தெரியவில்லை. அந்த சூழ்நிலையில், அந்த ஊரில் உள்ள ஒரு சில பெரியவர்களுக்கு அன்னை மரியா கனவில் தோன்றி, கோயில்கட்ட வேண்டிய இடத்தை அவர்களுக்கு அறிவித்தார். தங்களது பங்குத்தந்தையிடம் அவர்கள் இந்த செய்தியை கூறினார்கள். பங்குத்தந்தையும், இறைமக்களும் அந்த இடத்திற்கு சென்றபோது, அங்கு

14) வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் ----------------: வழியும் மிகக் --------------------: இதைக் கண்டுபிடிப்போர் சிலரே.

15) மானிட மகனுக்கு எதிராய் ஏதாவது ஒரு வார்த்தை சொல்லி விட்டவரும் மன்னிக்கப்படுவார். ஆனால், யாருக்கு எதிராகப் பேசுவோர் இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்புப் பெற மாட்டார்?

16) உங்களுக்குக் கடுகளவு நம்பிக்கை இருந்தால் நீங்கள் இம்மலையைப் பார்த்து ‘இங்கிருந்து பெயர்ந்து அங்குப் போ’ எனக் கூறினால் அது பெயர்ந்து போகும். இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?

17) ஆண்டவர் எனக்குப் பணித்தபடியே அதைக் குயவன் நிலத்திற்குக் கொடுத்தார்கள் என்று எந்த இறைவாக்கினர் உரைத்தது?

18) ‘உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளில் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள் என்று **எதில்** எழுதியுள்ளது’ என்று அலகை அவரிடம் சொன்னது.

19) ‘ஐயா, நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லும்: என் பையன் நலமடைவான்.’ இதைக்கூறியது யார்?

20) ----------------, இவ்வுலகம்: நல்ல விதைகள், ------------ ------------- ---------------- ------------------: களைகள், ------------------------- ----------------------------------------

### சென்ற மாதத்தின் விடைகள்: சீராக்கின் ஞானம் - 21-51

**1.** 30:15; **2.** 31:26; **3.** 21:8; **4.** 51:2; **5.** 50:1; **6.** 40:2; **7.** 41:12; **8.** 32:24; **9.** 22:8; **10.** 49:7; **11.** 48:9; **12.** 33:13; **13.** 23:6; **14.** 47:2; **15.** 45:1; **16.** 34:14; **17.** 35:17; **18.** 26:14; **19.** 27:28; **20.** 43:29.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-08-2017

முகவரி

விவிலிய வினாடி வினா போட்டி
பதிப்பாசிரியர் “அப்படியே ஆகட்டும்”
ஜோதி மாதா ஆலயம்
ராஜீவ் காந்தி சாலை
ஒக்கியம் பேட்டை, சென்னை - 97





லூத்தருடைய நூல்கள், மரியா மீது அவர் கொண்டிருந்த அன்பு மற்றும் பக்தியை வெளிப்படுத்துகின்றன, மற்றும் அனைத்து பண்புகளின் மாதிரியாக அவரைப் புகழ்கின்றன. இறைவனின் தாயினுடைய புனிதத்தின் உன்னதத் தன்மையை அவர் மிகவும் உயர்த்திப் பேசுகின்றார், மேலும் மரியாளுடைய கன்னித்தன்மையின்மீது மற்ற மறுமலர்ச்சியாளர்களுடைய நம்பிக்கையோடு அவரும் இணைந்து சில நேரங்களில் அமல உற்பவத்தினுடைய தனிச்சிறப்பை உறுதிப்படுத்துகின்றார்.

**கிழக்கத்திய கிறிஸ்தவர்கள் மரியாவுக்கென தனிப்பட்ட பத்தியைக் கொண்டிருந்தனர்**

லூத்தர் மற்றும் கால்வின் இவர்களுடைய சிந்தனையைப் பற்றிய ஆய்வு, மற்றும் எவஞ்செலிக்கன் கிறிஸ்தவர்களுடைய (Evangelical Christians) சில புத்தகங்களுடைய ஆய்வு, மரியியல் கொள்கையினுடைய பல கருப்பொருள்களை ஒரு புதுப்பிக்கப்பட்ட சிந்தனையோடு சில ஆங்கிலிக்கன் மற்றும் புராட்டஸ்டன்டுகள் ஏற்றுக்கொள்ளத் துணைநின்றது. சிலர் கத்தோலிக்கர்களுடைய மரியியல் படிப்பினையின் அடிப்படையான கருத்துகளோடு மிகவும் நெருக்கமானதொரு நிலைப்பாட்டிற்கு வந்தனர், அதாவது அவருடைய தெய்வீகத் தாய்மை (divine motherhood), கன்னித்தன்மை (virginity), புனிதத்துவம் மற்றும் ஆன்மீகத் தாய்மை (holiness and spiritual motherhood).

திருச்சபையில் பெண்களுடைய இருப்பை அதிகமாக உணர்த்துகின்ற அக்கறை மீட்பின் வரலாற்றில் அன்னை மரியாளுடைய பங்கை அங்கீகரிக்கின்ற முயற்சியை ஊக்குவிக்கின்றது.

இந்த உண்மைகள் அனைத்துமே கிறிஸ்தவ ஒன்றிப்பை நோக்கிய பயணத்தில் நம்பிக்கை வைப்பதற்கான அநேக காரணங்களாகும், கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் அன்னை மரியாவினுடைய பிரசன்னத்திலிருந்து வருகின்ற மகிழ்ச்சியை கிறிஸ்துவில் தங்களுடைய சகோதர சகோதரிகளோடு பகிர்ந்துகொள்வதற்கான ஆர்வத்தைக் கொண்டுள்ளனர்.

3. சகோதரர்களிடையே யார் “ஆண்டவரும் மீட்பருமானவருடைய தாய்க்கு உரிய மரியாதை கொடுக்கிறார்களோ அவர்கள் பக்தி உணர்வோடும் உணர்ச்சிப்பெருக்கோடும் என்றும் கன்னியான கடவுளின் தாயைப் பெருமைப்படுத்துகிறார்கள்”, (*Lumen Gentium*, n. 69) என்று கிழக்கத்திய கிறிஸ்வர்களை இங்கே சங்கம் குறிப்பிடுகின்றது.

அவர்களுடைய அநேக பக்தி முயற்சிகளின் வெளிப்பாடுகளிலிருந்து நாம் காண்பதைப்போன்று, மரியாளுக்கான வணக்கம் கத்தோலிக்கர்கள் மற்றும் கிழக்கத்திய கிறிஸ்தவர்களுக்கிடையேயான சிறப்பானதொரு உறவை உணர்த்துகின்றது.

இருப்பினும், மரியாளின் அமல உற்பவம் (Immaculate Conception) மற்றும் விண்ணேற்புக் கோட்பாடுகள் (Assumption) பற்றிய கருத்துவேறுபாடுகளும் இருக்கின்றன, இந்த உண்மைகள் முதலில் ஒருசில கிழக்குத் திருச்சபை இறையியலாளர்களால் விவரிக்கப்பட்டாலும் - ஒருவர், கிரகோரி பலாமஸ் (d.1359), நிகோலாஸ் கபசிலாஸ் (d. after 1369), மற்றும் ஜார்ச் ஸ்கோலாரியோஸ் (d. after 1472) போன்ற மிகச்சிறந்த திருச்சபைத் தந்தையர்களை நினைத்துப் பார்க்க வேண்டும்.

எவ்வாறாயினும், இந்த கருத்து வேறுபாடுகள், உட்பொருளைவிட (content) முன்வரைவு அல்லது வடிவமைப்பைப் (formulation) பற்றிய கேள்விகளே ஆகும். எனவே, மரியாவுடைய தெய்வீகத் தாய்மையில், அவருடைய என்றென்றைக்குமான கன்னித்தன்மையில், அவருடையப் பூரணப் புனிதத்தன்மையில் மற்றும் தன் மகனிடம் அவருடைய தாய்மைக்குரிய பரிந்துரையில் நம்முடைய பொதுவான நம்பிக்கையை நாம் மறப்பதற்கு ஒருநாளும் இட்டுச்செல்லக்கூடாது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் நினைவுகூர்வதைப்போன்று, இந்த, “உணர்ச்சிப் பூர்வமான ஆசைகள்’ (fervent impulse) மற்றும் “பக்தி உள்ளம்” (devout mind) கத்தோலிக்கர்களையும் ஆர்த்தோடாக்ஸ் கிறிஸ்தவர்களையும் கடவுளின் தாயினுடைய பக்தியில் ஒன்றிணைக்கின்றது.

4. “இன்றைய உலகில் திருச்சபை” (*Lumen Gentium*) என்னும் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டின் கடைசியில் திருச்சங்கமானது நம்மைத் திருச்சபையின் ஒற்றுமை அல்லது ஒன்றிப்பை மரியாளிடம் ஒப்படைக்க அழைக்கின்றது: “திருச்சபையின் அனைத்து உறுப்பினர்களுமே ஒரு மிக முக்கியமான வேண்டுதலை, அதாவது, திருச்சிபையின் தொடக்க காலத்தில் அவளுடைய செபத்தின் மூலம் உதவியதைப் போன்று, இப்பொழுதும் எல்லா புனிதர்கள் மற்றும் வான தூதர்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டுள்ள அவள் தன்னுடைய மகனிடம் அனைத்து புனிதர்களின் தோழமையில் மன்றாடுகிறாள்” (*LG*, n. 69).

தொடக்க காலத் திருச்சபையில் மரியாளுடைய பிரசன்னம் இதயங்களின் ஒன்றிப்பை வளர்த்ததைப் போன்று, அதாவது அவளுடைய செபம் அவர்களை உறுதிப்படுத்தியது மற்றும் ஒற்றுமையில் வளர்த்ததைப் (cf. Acts 1:14), போன்று “ஒற்றுமையின் அன்னை” (Mother of Unity) (*Sermo* 192. 2; PL 38, 1013) என்று புனிதர் அகுஸ்தினார் அழைக்கின்றவளோடு நாம் கொண்டுள்ள மிக நெருங்கிய உறவு, கிறிஸ்தவர்கள் அனைவரும் நெடுங்காலமாக எதிர்பார்க்கின்ற கிறிஸ்தவ ஒன்றிப்பு என்னும் கொடையை அனுபவிக்கின்ற நிலைக்கு கிறிஸ்தவர்களைக் கொண்டு செல்லும் என்பது உறுதி.







# விவிலிய வினா விடை

**ஆகஸ்ட் 2017 – மத்தேயு நற்செய்தி**

ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

1) ஆபிரகாமின் மகனும் தாவீதின் மகனுமானவர் யார்?

2) தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் --------------------------------

3) முன்மதி உடைய உயிரினம் எது? கபடு இல்லாத பறவை எது?

4) கடவுள், ‘உன் தந்தையையும் தாயையும் மதித்து நட’ என்றும், ‘தந்தையையோ தாயையோ சபிப்போர் என்ன செய்யப்படவேண்டும்’ என்றும் உரைத்திருக்கிறார்.?

5) பின்பு செபதேயுவின் மனைவி தம் மக்களோடு ஒரு வேண்டுகோள் விடுக்குமாறு இயேசுவிடம் வந்து பணிந்து நின்றார். அந்த வேண்டுகோள் என்ன?

6) ஏனெனில் உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும். அவர்கள் நிறைவாகப் பெறுவர். இல்லாதோரிடமிருந்து அவரிடமுள்ளதும் எடுக்கப்படும். இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?

7) எந்த அரசன் காலத்தில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார்?

8) உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே என்ன இருக்கும்?

9) மனிதராய்ப் பிறந்தவர்களுள் --------------------- ------------------------ பெரியவர் எவரும் தோன்றியதில்லை.

10) காலை வேளையில், வானம் சிவந்து மந்தாரமாயிருந்தால், இன்று என்ன நிகழும்?

11) அவர் எருசலேமுக்குள் சென்றபோது நகரம் முழுவதும் பரபரப்படைய, ‘இவர் யார்?’ என்னும் கேள்வி எழுந்தது. அதற்குக் கூட்டத்தினர் என்ன கூறினர்?

12) ‘எல்லாரும் உம்மை விட்டு ஓடிப் போய்விட்டாலும் நான் ஒரு போதும் ஓடிப்போக மாட்டேன்’ என்றார். இதை கூறியது யார்?

13) ‘என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்’ என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது. இது எந்த அதிகாரம்? எந்த வசனம்?

துன்பங்களை கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்வாறு அனுகுகிறோம் என்று சிந்திக்க வேண்டும். ஆண்டவர் இவ்வுலகத்திற்காக, மக்களுக்காக, நமக்காக சிலுவையை சுமந்தார். ஒருபோதும் தன்னைப் பற்றி எண்ணாமல் இருந்ததால் மட்டுமே அவருக்கு இது சாத்தியமாயிற்று. இன்று நாமும் அவர்வழி பின்பற்றி நடக்க வேண்டுமாயின் நம் தன்னலத்தை துறக்க வேண்டும். பிறர்மீது, அதிலும் குறிப்பாக ஏழை, எளியவர் மீது பற்றுகொண்டு வாழ வேண்டும், பிறருக்காக நம்மை அர்ப்பணிக்க வேண்டும். இப்படி வாழ்ந்தால் மட்டுமே நாம் ஆண்டவர் இயேசுவின் சீடர்களாவோம். இயேசுவின் உண்மைச் சீடர்களாக வாழ இறையருளை வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

ஆண்டவரால் ஆட்கொள்ளப்பட்ட எவராலும் அவரின் சொற்களை அறிக்கையிடாமலும், அறிக்கையிடுவதை வாழ்ந்து காட்டாமலும் இருக்க முடியாது. அவ்வார்த்தை இதயத்தில் பற்றியெரியும் தீ போல இருக்கின்றது என்று கூறும் இந்த முதல் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

கடவுளுக்கு நாம் செலுத்தும் வழிபாடு என்பது நம்மையே பலியாக்குவதுதான். அதுவே கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலி என்று கூறி, பிறருக்காக நம்மை அர்ப்பணிக்க அழைப்பு விடுக்கும் இவ்விரண்டாம் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. நம்பிக்கை அளிப்பவரே இறைவா! உம் திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம் நற்கருணை பிரசன்னத்திலே, உம் வார்த்தையிலே இணைந்திருந்து உம் திருச்சபையைச் சிறப்புற வழிநடத்தி அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் ஊற்றே எம் இறைவா! கவலை, நோய், துன்பம் போன்றவற்றிலிருந்து விடுதலை பெறத் தவித்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்களும் நீர் கொடுக்கின்ற ஆறுதலைப் பெற்றுக்கொள்ளவும், இயற்கை, செயற்கை அழிவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. என்றென்றும் மாறாத பேரன்பு உடையவரான தந்தையே! உலகிலிருந்து தவறுகள் அகலவும், நோய்கள் நீங்கிப் பஞ்சம் ஒழியவும், சிறைப்பட்டோர் விடுதலை பெறவும், வழிப்போக்கர் பாதுகாப்புப் பெறவும், பயணம் செய்வோர் நலமாக நாடு திரும்பவும், நோயுற்றோர் நலம் பெறவும், இறக்கின்றவர் மீட்பின் நிறைவு பெறவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அருட்பெருஞ்சுடரே எம் கடவுளே! எம் பங்கில் உள்ள எல்லா குழந்தைகளுக்காகவும் வேண்டுகிறோம். அவர்கள் இறையுணர்வு மிக்கவர்களாக நாளும் வளர ஏதுவான சூழ்நிலைகள் அமைய, பெற்றோரும் பெரியோரும் அவர்களின் ஆன்மீக வாழ்விற்கும், ஞான வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் தந்து நல்ல மக்களாக அவர்களை வளர்த்தெடுக்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





**மரியாள் வழியாக நாம் ஒற்றுமை மற்றும் ஒன்றிப்புக்காக செபிக்கின்றோம்**

திருச்சபையின் தொடக்க காலத்தில் கிறிஸ்தவ சமூகத்தினுடைய பயணத்தில் நற்செய்தி அறிவிப்பிலும் ஒருமனத்தோடு செபிப்பதிலும் உதவி செய்தவள், இன்றும் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட அனைவரிடமும் முழு உறவையும் மன்னிப்பையும் அவளுடைய மன்றாட்டின் வழியாக பெற்றுத்தரவேண்டுமென்று கன்னி மரியாளிடம் தொடர்ந்து செபிக்கின்றோம்.

மனுக்குலத்தின் தாயாகிய மரியாளுக்கு மனுக்குலத்தினுடைய ஆசைகளும் தேவைகளும் நன்றாகத் தெரியும். “மனுக்குலத்தினுடைய அனைத்து குடும்பங்களுக்காகவும், அவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற பெயரோடு பெருமைப்படுத்தப்பட்டாலும் அல்லது அவர்கள் இன்னும் மீட்பரை அறியாதவர்களாக இருந்தாலும், தமதிரித்துவத்தின் மற்றும் மிகவும் புனிதமானவருடைய மகிமைக்காக, கடவுளுடைய மக்கள் என்ற வகையில் ஒற்றுமையிலும் அமைதியிலும் மகிழ்ச்சியோடு ஒன்றாகக் கூடியிருக்க” (*LG*, n. 69) வேண்டுமென்று திருச்சங்கம் குறிப்பாக அவளிடம் பரிந்துரைக்க வேண்டுகிறது.

அமைதி, ஒன்றிப்பு மற்றும் ஒற்றுமையாகிய எதற்காகவெல்லாம் திருச்சபை மற்றும் மனுக்குலம் வேண்டுகிறதோ அது இன்னும் மிகத் தொலைவிலேயே இருப்பதாகத் தோன்றுகிறது. இருந்தாலும், நாம் மரியாளிடமிருந்து கற்றுக்கொள்வதைப் போன்றும் மற்றும் அவளுடைய பரிந்துரையில் நம்புவதைப் போன்றும், அவைகள் தொடர்ந்து தேடப்பட வேண்டிய ஆவியினுடைய கொடைகள்.

5. இந்த வேண்டுதலோடு கிறிஸ்தவர்கள் நம்பிக்கை என்னும் பண்பினால் நிரப்பப்பட்டு, திருச்சபையை எதிர்காலத்தை நோக்கியதொரு பயணத்தில் தொடர்ந்து வழிநடத்துபவளாக அவளுடைய எதிர்பார்ப்பைப் பகிந்துகொள்கிறார்கள்.

அவள் “கடவுளிடமிருந்து அவளுக்குக் கூறப்பட்டவை அனைத்தும் நிறைவேறும் என்று நம்பியதால்” (லூக் 1:45) தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியை அடைந்ததைப் போன்று, கன்னி மரியாள் நம்பிக்கை கொண்டோருக்கும், திருச்சபை மற்றும் உலகம் அனைத்திற்குமே அவர்களுடைய இன்பங்கள் மற்றும் இந்த வாழ்வினுடைய துன்பங்களுக்கு மத்தியில் என்றும் மறையாத நம்பிக்கையினுடைய உண்மையான இறைவாக்கினர்களாக அவர்கள் இருக்கத் துணையாக நிற்கின்றாள்.

**Original Source:**

Pope John Paul II, *Separated Brethren also Honour Mary*, L'Osservatore Romano, 19 Novembre 1997, p.7.

# திருஅவையின் குரல்

- அனு ஆயுதங்கள் அற்ற உலகை அமைப்பதற்கும், அனுப் பரிசோதனை புரிந்துணர்வு தடை ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்கும், சமூக வலைத்தளங்கள் உதவுமாறு, 54 நாடுகளைச் சேர்ந்த ஏறக்குறைய நூறு இளைஞர்கள், வியன்னாவில் நடந்த பன்னாட்டு கூட்டம் ஒன்றில் கேட்டுக்கொண்டனர்.
- விசுவாசக்கோட்பாட்டுப் பேராயத் தலைவராக ஐந்தாண்டுகள் பணியாற்றிய, கர்தினால் Gerhard Ludwig Muller அவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அப்பேராயத்தின் புதிய தலைவராக, இயேசு சபை பேராயர் Luis Fracisco Ladaria அவர்களை நியமித்துள்ளார்.
- ‘மனித வாழ்வை, எல்லாவற்றுக்கும் மேலாக, அவ்வாழ்வு நோயால் காயப்படுத்தப்பட்டுள்ளபோது, அதைப் பாதுகாக்க வேண்டியது, கடவுள் நம் எல்லாரிடமும் ஒப்படைத்துள்ள அன்பின் கடமை’ என்ற சொற்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் டுவிட்டரில் செய்தியாக வெளியிட்டுள்ளார். பிரித்தானியாவின் இலண்டனில் உள்ள சிறார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த, அபூர்வ நோயால் துன்புறும் Charlie Gard என்ற பத்து மாத ஆண் குழந்தையின் வாழ்வை நீடிக்கும் கருவிகளை அகற்றி விடுவதற்கு, நீதிமன்றம் தீர்மானித்துள்ள வேளை, மனித வாழ்வைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை இவ்வாறாக டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.
- ஒரே பாலினத் திருமணத்தை சட்டப்படி அங்கீகரிப்பதற்கு ஆதரவாக ஜெர்மன் நாடாளுமன்றம் வாக்களித்திருப்பது குறித்து கவலை தெறிவித்துள்ளார் ஜெர்மன் நாட்டு ஆயர் Heiner Koch அவர்கள் குறை கூறியுள்ளார்.
- இந்தியாவில் பரவலாக இடம்பெற்றுவரும் சமய சகிப்பற்றதன்மைக்கு எதிர்ப்பையும், வன்முறைக்குப் பலியானவர்களுடன் ஒருமைப்பாட்டுணர்வையும் தெரிவித்து ஆயிரக்கணக்கான மக்கள் புது டில்லியில் அமைதிப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.
- ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தில் நில அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட கிரேக்கத்தின் லெஸ்போஸ் நகரின் மக்களுக்கு உதவும் நோக்கில் மற்றும் தமது அன்பையும் அருகாமையையும் வெளிப்படுத்தும் விதத்தில் 50,000 யூரோக்களை அனுப்பியுள்ளார் திருத்தந்தை அவர்கள்.
- துறவற வாழ்வுக்கு இறையழைத்தல்களை ஊக்குவிக்கும்போதும், துறவு இல்லங்களில் பணியாற்றுவதற்கு ஆட்களைத்





2. எங்களுக்காக துன்பப்பட்டவரே எம் இறைவா! துன்பங்கள் வழிதான் வாழ்வு என்பதை நாங்கள் உணர்ந்து, ஏற்றுக்கொண்டு, எங்கள் வாழ்க்கையில் நாங்கள் சந்திக்கும் எல்லா துன்பங்களிலும் உமது திருவுளத்தைக் கண்டுகொண்டு, அர்த்தமுள்ள வாழ்க்கையை அமைத்துக்கொள்ள அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. இரக்கத்தின் ஆண்டவரே! பல்வேறு சிறைகளில் பல்வேறு குற்றங்களுக்காக தண்டனை அனுபவித்துவரும் உம் பிள்ளைகளை உம் பாதம் கொண்டு வருகிறோம். இவர்கள் தங்கள் குற்ற உணர்ச்சியிலிருந்து விடுதலை பெற்றிடவும், உமது அன்பையும் இரக்கத்தையும் பிற மனிதர்களில் கண்டு அனுபவித்திடவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அருட்பெருஞ்சுடரே எம் இறைவா! எம் நாட்டுத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள் அனைவருக்காகவும் வேண்டுகிறோம். இவர்கள் தங்கள் பொறுப்பிலிருந்து தவறும்போது தாம் பாவம் செய்கிறோம் என்ற தன்னிலை உணரக்கூடிய மனதை தந்து, அவர்கள் தங்களின் கடைமைகள், பொறுப்புக்களை செவ்வனே ஆற்றிட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 22 ஆம் ஞாயிறு (03.09.2017)
## (எரே 20: 7–9; உரோ 12: 1–2; மத் 16:21–27)

**திருப்பலி முன்னுரை**

அன்பிற்க்கினியவர்களே! நம்மைப் பராமரித்து, அரவணைத்து, வழிநடத்திவரும் நம் அன்பு இறைவனை போற்றிப் புகழ்வதற்காக நம் ஆண்டவரின் சந்நிதியில் நாமெல்லாம் ஒரே குடும்பமாக கூடி வந்துள்ளோம். இவர் நம்முடைய கடவுள் நாம் அவரது அன்பு மக்கள் என்னும் உணர்வு நம்மை இங்கே ஒன்றுகூட்டியிருக்கிறது. “என்னைப் பின்பற்ற விரும்பும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” என்ற சவால் இன்று நம் முன்னால் வைக்கப்படுகின்றது. சிலுவைகளின்றி கிறிஸ்தவம் இல்லை. போராட்டங்கள் இன்றி வாழ்க்கை இல்லை. மனித வாழ்க்கை என்பது துன்பங்கள் நிறைந்ததுதான். ஆனால் அந்தத்





என்னும் பரவலான புரிதலிலிருந்து மாறுபட்ட, புரட்சியான அறிக்கை பேதுருவின் அறிக்கை. இந்தப் புரிதலின்படி விசுவசிக்கின்றபோது நாம் பல சோதனைகளை சந்திக்க வேண்டிவரும் என்ற படிப்பினையும் நற்செய்தி நமக்குத் தருகிறது. கிறிஸ்தவர்களை அழிக்க வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்த சவுல், இயேசு எப்படிப்பட்ட மெசியா என்பதை புரிந்துகொள்கிறபோது, பவுலாக மாறுகிறார், அதன் காரணமாக துன்பங்களை ஏற்கிறார். சாவையும் சந்திக்கிறார். இவர்கள் நம்மை கேட்பது இதுதான்: நான் இந்த இயேசுவை எப்படி புரிந்து வைத்திருக்கிறேன்? எப்படி நான் அவரை என் வாழ்க்கையின் வழியாக பிறருக்கு அறிவிக்கிறேன்? இக்கேள்விகளை நம்மையே பார்த்துக் கேட்போம், விடைதேடி இறையருளை வேண்டுவோம் இத்திருப்பலியில்.

“வானகமே நமது தாய்நாடு”

**முதல் வாசக முன்னுரை**

நாம் செய்கிற எல்லா செயல்களிலும் நமது ஆண்டவரின் மகிமையும் புகழும் வெளிப்படுத்தப்படவேண்டும். ஆண்டவரின் வார்த்தைகளின்படி நடக்கிறவரையே ஆண்டவர் உயர்த்துவார் என்பதை எடுத்துக்கூறும் இந்த முதல் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

அனைத்தும் ஆண்டவரிடமிருந்தே வந்தன, அவராலேயே உண்டாயின, அவருக்காகவே இருக்கின்றன என்பதை நாம் புரிந்துகொள்கிறபோது நம்முடைய வாழ்க்கை அவருக்கு உகந்ததாக மாறுகிறது என்று எடுத்துரைக்கும் இவ்விரண்டாம் வாசகத்திற்கு கவனமுடன் செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. நலன்களின் ஊற்றானவரே! எம் திருத்தந்தை, ஆயர் பெருமக்கள், குருக்கள், துறவிகள் அனைவரையும் ஆசீர்வதித்தருளும். இவர்களின் வாழ்வு பிறருக்கு வாழ்வு தருவதாக அமையவும், இவர்களின் வழியாக இறைவனின் இரக்கமும், அருளும், எல்லார் மேலும் நிறைவாகப் பொழியப்படவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





தெரிவுசெய்யும்போதும், மிகவும் கவனத்துடன் செயல்படுமாறு, இந்திய இருபால் துறவு சபைகள் அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

- மீண்டுமாக மெக்சிகோவில் ஒரு கத்தோலிக்க அருள்பணியாளர் ஒருவர் கொடூரமான முறையில் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். இதற்கு அந்நாட்டு கிறிஸ்தவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.
- ஆண்டவரின் இறுதி இரவுணவை நினைவுகூரும் திருநற்கருணைக் கொண்டாட்டத்திற்குப் பயன்படுத்தப்படும் ஓஸ்தி மற்றும் திராட்சை இரசம் தரம் குறித்து, உலகின் அனைத்து ஆயர்களுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது திருப்பீட திருவழிபாடு மற்றும் அருளடையாளப் பேராயம். இதைத் தயாரிப்பவர்கள் இவை எதற்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதை உணர்ந்து, நேர்மை, பொறுப்புணர்வு மற்றும் தகுந்த மரியாதையோடு தயாரிக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பானமா நாட்டில் நடைபெறவிருக்கும் 34வது உலக இளையோர் நாள் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, இளையோர் நாள் நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் சிலுவையும் அன்னை மரியாவின் உருவப்படமும் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் முதல் உலகின் பல நாடுகளுக்குப் பவனியாகக் கொண்டு செல்லப்படும் என்று அந்நாட்டு ஆயர் பேரவை அறிவித்துள்ளது.
- ‘சித்ரவதைகளுக்கு எதிரான என் வன்மையான கண்டனத்தை மீண்டும் ஒருமுறை வெளியிடுவதோடு, இத்தகைய நிலைகள் முற்றிலுமாக ஒழிக்கப்படவும், சித்ரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டோர் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கவும், அனைவரையும் விண்ணப்பிக்கிறேன் என்றும், இறைவனின் கண்களில் நாம் ஒவ்வொருவரும் விலைமதிப்பற்றவர், ஈடு இணையற்றவர்கள்’ என்று டுவிட்டரில் எழுதியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.
- ஒருவர் கொலையாளியாக இருந்தபோதிலும், அந்த மனிதரைக் கொலை செய்வது, மற்றொரு கொலையாகும் என ஜப்பான் ஆயர்கள் மரண தண்டனைக் எதிரான தங்களின் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.
- ‘இறைவனும் மனிதனும் சந்திக்கும் புனித மலையாம் இயேசுவை நோக்கி அழைத்துச் செல்லும் பாதையில் அன்னை மரியா நம்மை வழிநடத்துவாராக’ என கார்மேல் அன்னை விழாவன்று திருத்தந்தை அவர்கள் டுவிட்டரில் செய்தியாக வெளியிட்டார்.
- கடந்த சில நாட்களில் கோவாவில் 16 கல்லறைகள் சேதமாக்கப்பட்டும், கல்லறைத் தோட்டத்தின் வாசலில் இருந்த பெரிய சிலுவை சேதமாக்கப்பட்டும், மரச்சிலுவைகளும் ஒன்பது பளிங்குக்கல் சிலுவைகளும் உடைக்கப்பட்டும் உள்ளன. இது குறித்து தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார் கோவா பேராயர் Filipe Neri Ferrao.

**ஆதாரம்: வத்திக்கான் வானொலி**

**தொகுப்பு: பதிப்பாசிரியர் அருள்பணி. சின்னப்பராஜ் ம.ஊ.ச**



# பிளவுபட்ட திருஅவைகளை ஒன்றிணைக்கும்

# 2 மரியியல் சிந்தனைகள்

அருள்பணி. டெனிஸ் ம.ஊ.ச.,, உரோமை.

அன்னை மரியாவைப் பற்றிய பல்வேறு திருஅவையின் பல்வேறு விதமான கருத்துக்களும் எண்ணங்களும் பிரிவினை திருஅவையைச் சேர்ந்த சகோதரர்களுடன் மரியாவைப் பற்றிய சமூகமான ஒரு உரையாடல் சாத்தியமானது அல்ல என்பதுதான் நம்மில் பலருடைய எண்ணமாக இருக்கின்றது. இதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், பெரும்பான்மையான கத்தோலிக்கர்கள் இன்னும், பிற கிறிஸ்தவ சபையினரைப்பற்றி அறியாமையில் வாழ்வதுதான். அதேபோல, பிற சபையைச் சேர்ந்தவர்கள் கத்தோலிக்கர்களைப் பற்றிய தவறான கண்ணோட்டமும் அறியாமையும்தான் காரணம். எனவே, மரியாவைப்பற்றி பல்வேறு திருஅவையினரின் வேறுபட்ட கருத்துக்களைப் பற்றிய தவறான கண்ணோட்டமும் அறியாமையும்தான் காரணம். எனவே, மரியாவைப் பற்றி பல்வேறு திருஅவையினரின் வேறுபட்ட கருத்துக்களைப் பற்றி நாம் முழுமையாக அறிந்துகொள்ள வேண்டுமென்றால், அந்த திருஅவைகளின் வரலாற்றுப் பின்னணிகளைப் பற்றி நாம் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம். எனவே, திருஅவையின் இரண்டாயிரம் ஆண்டு கால வரலாற்றில் நடந்த எல்லா பிரிவினைகளைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ள, தேவையான நேரமின்மையால், திருஅவையின் வரலாற்றில் ஏற்பட்ட ஒருசில மிக முக்கியமான பிளவுபாடுகளையும், ஒருசில பிரிவினைத் திருஅவைகளின் தோற்றமும் பற்றி நாம் இப்போது தெரிந்துகொள்ள இருக்கின்றோம்.

**திருஅவையின் பெரிய பிளவுபாடு (கிபி. 1054)**

திருஅவையின் ஆரம்பகாலமுதல், கீழை மரபுத் திருஅவைக்கும் (Eastern Orthodox Church) மேற்கத்திய இலத்தீன் திருஅவைக்கும் (Western Latin Chruch) பல்வேறு விதமான கருத்து வேறுபாடுகள் இருந்ததை நாம் வரலாற்றுப் பூர்வமாக விளக்க முடியும். உரோமையை தலைமைப்பீடமாகக் கொண்டு திருஅவையை வழிநடத்தி வந்த திருத்தந்தையர்களும், கான்ஸ்டான்டிநோபிள் என்னும் இடத்தை மையமாக வைத்து திருஅவையை வழிநடத்திய கிரேக்க மொழியைச் சேர்ந்த கீழைநாட்டு மரபுவழி திருஅவையின் முதுபெரும் தந்தையர்களுக்கும்





பெருமை கொள்கிறேன்' என்று சொல்வது ஆண்டவரின் அழைப்பு எல்லாருக்குமானது என்பதை உணர்த்துகின்றது. இந்த இரண்டாம் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. நம்பிக்கை அளிப்பவரே எம் இறைவா! உம் திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம் நற்கருணை பிரசன்னத்திலே, உம் வார்த்தையிலே இணைந்திருந்து உம் திருச்சபையை சிறப்புற வழிநடத்தி செல்ல வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. கொடை வள்ளலாகிய எம் இறைவா! பல்வேறு மொழிகள், சமயங்கள், கலாச்சாரங்கள் நிறைந்ததொரு சமுதாயச் சூழலைக் கொண்டிருக்கும் எங்கள் நாட்டை நிறைவாக ஆசீர்வதியும். நாங்கள் அனைவரும் இறைத்தந்தையின் மக்களே என்பதை உணர்ந்து அனைவரையும் சமமாக பாவித்து, ஒற்றுமை சமாதானத்துடன் வாழ உமது அருள்வரங்களைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. வாக்களித்த அனைத்தையும் எமக்கெனச் செய்து முடிக்கும் ஆண்டவரே! இம்மண்ணிலே வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்களும், எங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரும், உமது அன்பிலிருந்து எங்களைப் பிரிக்க முற்படும் எல்லாவித தீய சக்திகளையும் இனங்கண்டு அவற்றை முறியடித்து, உமக்கேற்றவர்களாக வாழ வேண்டிய ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. மனநிறைவின் ஊற்றே இறைவா! எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாத மனதை எனக்குத் தந்தருளும். நீர் எனக்குத் தந்திருக்கிற கொடைகள், நன்மைகள், செல்வங்களை எண்ணிப்பார்த்து, நன்றி சொல்கிற, மகிழ்ச்சி அடைகிற மனநிலையை எங்களுக்குத் தாரும். நீர் தரும் ஆறுதலும், உம்மோடு, உமக்காக செலவழிக்கும் நேரமும், எவ்வளவோ மேலானவை என்பதை நாங்கள் உணர்ந்திட எங்களுக்கு அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 21 ஆம் ஞாயிறு (27.08.2017)**

**(எசாயா 22: 19-23; உரோ 11: 33-36; மத் 16:13-20)**

**திருப்பலி முன்னுரை**

அன்பிற்க்கினியவர்களே! இயேசு எனக்கு யார்? நான் எவ்வாறாக இயேசுவை புரிந்து கொண்டிருக்கிறேன்? அவரை எங்ஙனம் பிறருக்கு அறிவிக்கிறேன்? என்ற கேள்விகளை இன்றைய ஞாயிறு வார்த்தை வழிபாடு நமக்கு விடுக்கின்றது. இன்றைய நற்செய்தியில் 'இயேசுவே வாழும் கடவுளின் மகன், மெசியா' என்று விசுவாச அறிக்கை செய்கிறார் தூய பேதுரு. இவ்வுலக அரசர்களைப்போல போரிட்டு வெற்றி பெற்றுத்தரப்போகிறவர்

## பொதுக்காலம் 20 ஆம் ஞாயிறு (20.08.2017)
### (எசாயா 56: 1, 6–7; உரோ 11:14–15, 29–32; மத் 15:21–28)

**திருப்பலி முன்னுரை**

அன்பிற்கினியவர்களே! ஆண்டவர் கிறிஸ்துவின் மீட்பு என்பது எல்லாருக்கும் தரப்படுகின்ற ஒன்று. அது எல்லாருக்கும் பொதுவானது. அவரது மீட்பையும், வாழ்வையும் பெற்றுக்கொள்வதில், எந்தவித பாகுபாடும் இல்லை என்பது இன்றைய நற்செய்தி நமக்கு உணர்த்தும் பாடம். ஆண்டவரை யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. அவரை ஒரு குறுகிய வட்டத்திற்குள் அடைத்து வைக்க முடியாது. அவரை நம்புகின்ற அனைவருக்கும் அவரின் மீட்பு தரப்படுகின்றது என்பதையே, இன்றைய நற்செய்தியில் வரும் கானானியப் பெண்ணுடன் இயேசு கொள்ளும் உரையாடல் நமக்கு உணர்த்துகின்றது. நம்மிடம் காணப்படுகின்ற வேறுபாடுகள், பாகுபாடுகள், நம்மைப் பற்றிய உயர்வான எண்ணங்கள், பிறரைப் பற்றிய குறைவான மதிப்பீடுகள் ஆகியவை களையப்பட வேண்டும் என்பதை உணர்ந்துகொள்வோம். ஆண்டவரின் பார்வையில் அனைவருமே சமமானவர்கள்தாம் என்பதை ஏற்றுக்கொள்வோம். இனம், மொழி, சாதி, சமயம், அந்தஸ்து என்று எந்த வகையில் நாம் பிறரை பிரித்தாலும், அவர்களை ஒதுக்கினாலும் நாம் கிறிஸ்துவோடு ஒன்றிணைந்தவர்கள் அல்ல என்பதை நினைவில் நிறுத்துவோம். அனைவரையும் ஏற்றுக்கொண்டு, அரவணைத்து வாழ இறைவன் தரும் அழைப்பை ஏற்று அதற்கான இறையருளை வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**“முப்பதும், அறுபதும், நூறுமாய் பலன் கொடுப்போம்.”**

**முதல் வாசக முன்னுரை**



என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய ‘இறைமன்றாட்டின் வீடு’ என்று அழைக்கப்படும் என்ற வார்த்தைகள், கடவுள் முன்னிலையில் நாம் அனைவருமே சமமானவர்கள்தான், அவரவருடைய நம்பிக்கையும் விசுவாசமுமே அவர்களை கடவுளுக்கு உரியவர்களாக ஆக்குகிறது என்பதை எடுத்துரைக்கும் இந்த முதல் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

திருத்தூதர் பவுல் உரோமை நகர இறைமக்களைப் பார்த்து ‘பிற இனத்தாராகிய உங்களுக்குத் திருத்தூதராய் இருப்பதைக் குறித்து





பல்வேறு கருத்து வேறுபாடுகள் தோன்றின. பல நூற்றாண்டு காலமாக கலாச்சாரம், மொழி, வழிபாட்டுமுறை, அரசியல், சமூக ரீதியாக வேறுபட்டு வாழ்ந்த கிறிஸ்தவர்கள், மேலைநாட்டு இலத்தீன் மொழி வழிபாட்டு முறைகளை ஏற்க மறுத்ததோடு, உரோமை நகரின் திருத்தந்தையர்களுக்கு செவிமடுத்து அவர்களது போதனைகளின்படி வாழவும் மறுத்தனர். இத்தகைய கருத்து வேறுபாடுகளின் காரணமாக கிபி. 1 1054 ஆம் ஆண்டில் திருஅவை இரண்டு மாபெரும் பிரிவுகளாகப் பிளவுபட்டது. கான்ஸ்டாண்டிநோபிள் முதுபெரும் தந்தை மிக்கேல் செலாரியுஸ், கான்ஸ்டாண்டிநோபிள் நகரில் இருந்த அனைத்து இலத்தீன் திருஅவை கோவில்களை மூட வேண்டுமென்று உத்தரவிட்டார். கிபி. 1054 ஆம் ஆண்டு திருத்தந்தை 9 ஆம் சிங்கராயர் தூதுவர் ஒருவரை கான்ஸ்டாண்டிநோபிள் அனுப்பி சமாதான பேச்சுவார்த்தைகள் நடத்த எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தது. திருத்தந்தையின் அதிகாரத்தை ஏற்க மறுத்த செலாரியுஸ் திருஅவையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டார். இவ்வாறு 1054 ஆம் ஆண்டு மேற்கத்திய இலத்தீன் திருஅவை (Western Latin Chruch), மற்றும் கீழைநாட்டு மரபுவழித் திருஅவை (Eastern Orthodox Church) என்றும் இரண்டு பிரிவுகளாகத் திருஅவை பிளவுபட்டது. கீழைத்திருஅவைக்கும் மேற்கத்திய இலத்தீன் திருஅவைக்கும் இடையே மறைக்கோட்பாடுகள் அடிப்படையில் மிகப்பெரும் வேறுபாடுகள் ஒன்றும் கிடையாது. ஆனால், அன்னை மரியாவின் அமல உற்பவம் பற்றியும், விண்ணேற்பு விழா பற்றியும் ஒருசில கருத்து வேறுபாடுகள் உள்ளன.

**லூத்தரன் திருஅவை**

திருஅவையில் ஏற்பட்ட மற்றொரு மிகப்பெரும் பிளவுபாடு ஏற்பட வித்திட்டவர் ஜெர்மன் நாட்டு அகுஸ்தினார் சபையைச் சார்ந்த குரு மார்ட்டின் லூத்தர் (1483-1546). கத்தோலிக்கத் திருஅவையின் பல்வேறு விசுவாசக் கோட்பாடுகளையும், பாரம்பரியத்தையும் மறுத்து, மார்ட்டின் லூத்தர் 1517 ஆம் ஆண்டு சீர்திருத்தம் (Lutheran Reformation) கொண்டு வரும் வகையில் திருஅவையில் மற்றும் ஒரு பிளவுபாட்டை ஏற்படுத்தினார். விவிலியம் மட்டுமே (Sola Scriptura) நம் கிறிஸ்தவ வாழ்க்கைக்குப் போதுமானது. திருஅவையின் பாரம்பரியம் (Tradition) தேவையற்ற ஒன்று என்றும் போதித்தார். நமது வாழ்வில் நாம் செய்யும் நல்ல காரியங்கள் அல்ல, மாறாக ஆண்டவரின் அருள் மட்டுமே, நமது விசுவாசம் மட்டுமே நாம் மீட்பு அடைய காரணமாக அமையும் (Justification by Grace and by Faith) என்று போதித்தார். ஆண்டாண்டு காலமாக இருந்த திருஅவையின் பாரம்பரியங்களைத் தகர்த்தெறிந்தார். புரோட்டஸ்டன்ட் திருஅவையில் லூத்தரன் சபையைச் சேர்ந்தவர்களே மிகவும் பெரும்பான்மையானவர்கள்.

மார்ட்டின் லூத்தர் எழுதிய Commentary on the Magnificat என்ற புத்தகம், மரியாவின்மீது அவர் கொண்டிருந்த அன்பிற்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

**ஆங்கிலிக்கன் திருஅவை**

உரோமையில் உள்ள கத்தோலிக்கத் திருஅவையில் இருந்து பிளவுபட்டு தனி திருஅவையாக, ஆங்கிலிக்கன் திருஅவை நிறுவப்பட முக்கிய காரணம் என்ன? இங்கிலாந்து நாட்டு அரசன் எட்டாம் ஹென்றி (Henry VIII) தனது மனைவியை (Catherine of Aragone) திருமணவிலக்கு செய்துவிட்டு வேறொரு திருமணம் செய்துகொள்ள, திருஅவையின் உரோமை தலைமைப்பீடம் அனுமதி வழங்க மறுத்தது. எனவே, கத்தோலிக்கத் திருஅவையை விட்டு விலகி, ஆங்கிலிக்கன் திருஅவையை நிறுவி, திருஅவையில் மீண்டும் ஒரு மிகப்பெரும் பிறவு ஏற்பட காரணமானார்.

இவ்வாறாக கத்தோலிக்கத் திருஅவையின் பாரம்பரியம், திருத்தந்தைக்கு அவரது போதனைக்கு செவிமடுத்தல், இவற்றை தகர்த்தெறிந்து, திருஅவையின் எல்லா அருட்சாதனங்களையும் ஏற்றுக்கொள்ளாமல், ஆங்கிலிக்கன் திருஅவை விளக்கமும் மரியாதையும் வைத்துள்ளதா? இல்லையா? என்று பதில் கூறும் முன்பு, ஆங்கிலக்கத் திருஅவைக்குள்ளாக உள்ள பிரிவுகளைப் பற்றியும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

எவாஞ்செலிக்கல் ஆங்கிலிக்கன் திருஅவை (Anglicans of low Church) அன்னை மரியாவிற்கு வணக்கம் செலுத்த மறுக்கின்றனர். ஆனால், அவர்களைத் தவிர மற்ற ஆங்கிலிக்கன் திருஅவையைச் சேர்ந்த அனைவரும் அன்னை மரியாவை, இறைவனின் தாயாக (Theotokos) ஏற்றுக்கொண்டு, மரியாவுக்கு வணக்கம் செலுத்துகின்றனர்.

கத்தோலிக்கத் திருஅவையில் இருந்து பிரிந்து சென்ற கீழைமரபு திருஅவை (Eastern Orthodox), எதிர்ப்பாளர்களின் திருஅவை (Protestants), ஆங்கிலிக்கன் திருஅவை, இவர்களைத் தவிர மேலும் நூற்றுக்கணக்கான பெந்தகோஸ்து திருஅவையினரையும் நாம் சந்திக்கின்றோம்.

அன்னை மரியாவைப் பற்றி கத்தோலிக்கரல்லாத பிற திருஅவையைச் சேர்ந்தவர்கள் என்ன நினைக்கின்றார்கள், அவர்களின் நிலைப்பாடு என்ன என்பதைப் பற்றியும், மரியாவைப் பற்றிய வேறுபட்ட, மாறுபட்ட கருத்துக்களுக்கான காரணங்கள் என்ன என்பதையும் பற்றி அடுத்த இதழில் காண்போம்.

**தொடர்ந்து சிந்திப்போம்...**





இன்றைய வழிபாடு. அதற்கான அருள்வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு இணைவோம்.

**“சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, வாருங்கள் நம் ஆண்டவர் அழைக்கின்றார்”**

**முதல் வாசக முன்னுரை**

இறைவாக்கினர் எலியாவுக்கு மெல்லிய ஒலியில் காட்சி தருகிறார் ஆண்டவராம் கடவுள். ஆண்டவர் பல்வேறு வழிகளில், தம்மை நமக்கு வெளிக்காட்டிக்கொண்டே இருக்கிறார். நமது நம்பிக்கை உறுதியாக இருக்கும்போது அவரை நாம் உணர்ந்து கொள்வோம் என்று எடுத்துரைக்கும் இறை வார்த்தைக்குச் செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

கிறிஸ்தவர்களாகிய நாம், ஆண்டவரின் வழிகளில்தான் வாழ்கிறோம் என்பதை நமது மனச்சான்று நமக்கு தெளிவுபடுத்துகிறது. அந்த மனச்சான்று தூய ஆவியால் தூண்டப்பட வேண்டும் என்று எடுத்துரைக்கும் இந்த இரண்டாம் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. எல்லாம் வல்ல நித்திய இறைவா! எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தாரை நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் இறை நம்பிக்கையில் உறுதியுடன் நிலைத்து நின்று, இறைமக்களையும் நம்பிக்கை வாழ்வில் வழிநடத்திடத் தேவையான அருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. எம்மைப் படைத்தாளும் பரமனே எம் இறைவா! ஏழ்மை, எளிமை, நட்புறவு ஆகிய விழுமியங்கள் எங்களை விண்ணகப் பாதையில் இட்டுச்செல்லும் என்பதை உணரச்செய்யும். மேலும் நாங்கள் அதை உணர்ந்து எங்கள் அயலாருடன் நட்புறவுகொண்டு எங்களால் ஆன உதவிகள் செய்து வாழ்ந்திடத் தேவையான அருள்வரங்களைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. எப்பொழுதும் விழிப்பாயிருக்க அழைப்பு விடுப்பவரே எம் இறைவா! தலைவனுக்காய் காத்திருக்கும் பணியாளனைப் போன்று நாங்கள் எப்பொழுதும் இறைமகன் இயேசுவின் இரண்டாம் வருகைக்காய் காத்திருக்கவும், அதற்காக எங்களையே தயார் செய்யவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. வழிநடத்துபவரே எம் இறைவா! பொருளாதார பிரச்சனைகளில் சிக்கி பரிதவிக்கும் மக்களுக்காய் உம்மிடம் மன்றாடுகின்றோம். அவர்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளை நிறைவாகப் பொழியவும், உணவு, உடை, இருப்பிடம் இல்லாமல் தவிக்கும் மக்கள் அவைகளைப் பெற்றிடவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஜான் ஜோசப் ம.ஊ.ச., குழந்தை இயேசு ஆலயம், சென்னை.

**பொதுக்காலம் 19 ஆம் ஞாயிறு (13.08.2017)**
**(1 அர 19: 9, 11–13; உரோ 9: 1–5; மத் 14:22–33)**

**முன்னுரை**

அன்பிற்கினியவர்களே! இன்று பொதுக்காலத்தின் 19 ஆம் ஞாயிறு. நமது ஆண்டவர் மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை எப்படிபட்டது? நமது வாழ்க்கையில் நாம் சந்திக்கும் பிரச்சனைகளைக் கண்டு ஓடிவிடுகிறோமா? அல்லது ஆண்டவரை நம்பிக்கையோடு பற்றிக்கொள்கிறோமா? என்ற சிந்தனைகளை எழுப்புகிறது இன்றைய ஞாயிறு வழிபாடு. இன்றைய நற்செய்தி வாசகத்தில் பேதுரு ஆண்டவரை நோக்கி கடல்மீது நடந்து செல்கிறார். அது ஒரு பயணம். இப்பயணத்தின் துவக்கத்தில் அவரிடம் காணப்பட்ட நம்பிக்கை போகப்போக குன்றிவிடுகிறது. ஆண்டவரை நோக்கி போகும்போது வழியில் அவர் சந்தித்த பெருங்காற்று அவரை நிலைகுலைய செய்கிறது. அவரை அச்சம் ஆட்கொள்கிறது. அவர் கடலில் மூழ்குகிறார். தாம் மூழ்கப்போகிறோம் என்பதை உணர்ந்த பேதுரு, ஆண்டவரை நோக்கி "ஆண்டவரே, என்னைக் காப்பாற்றும்" என்று கூக்குரலிடுகிறார். ஆண்டவரும் தமது கரத்தை நீட்டி பேதுருவை காப்பாற்றுகிறார், கரை சேர்க்கிறார். நமது வாழ்வில் நாம் முதலில் ஆண்டவரை நோக்கி செல்ல முயல வேண்டும். ஆண்டவரை நோக்கிய இப்பயணத்தில் தடைகள் பல வரும். சிக்கல்கள், குழப்பங்கள், பேரச்சம் ஆகிய பிரச்சனைகள் நிச்சயம் வரத்தான் செய்யும். அவ்வேளைகளில், நம்பிக்கையோடு, காக்கும் தேவனாகிய நம் ஆண்டவரை நோக்கி கூக்குரலிடுகிறோமா? அப்படி அவரை மன்றாடி அழைக்கும்போது ஆண்டவர் தம் கரத்தில் நம்மை தாங்கிடுவார் என்ற விசுவாசத்தை ஆழப்படுத்தி வாழ அழைப்பு விடுக்கிறது







# நம் தாய் – நம் நாடு

திருமதி ஃபிலோம்மா, திருச்சி

## நம் தாய்

1950 ஆம் ஆண்டு திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர்
'அன்னை மரியா விண்ணேற்புப் பெற்றார்' – என்பதை
விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்தார்
"மரியா இறைவனின் மாசற்ற தாய் - அவரது
மண்ணக வாழ்வின் பயணம் முடிந்த போது
உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு
எடுத்துக் கொள்ளப்பட்டார் - இதை
இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட விசுவாசக் கோட்பாடாக
நாம் அறிவிகிறோம்; பறை சாற்றுகிறோம் - மற்றும்
வரையறுக்கிறோம்" - என திருத்தந்தை அறிவித்தார்
அன்னை மரியா இறைத்திட்டத்திற்கு தம்மையே
முழுமையாக அர்ப்பணித்ததால்
இறைவன் நிறைவாக அவரை மகிமைப்படுத்திய செயலே
அன்னையின் விண்ணேற்பு
அன்னையின் விண்ணேற்பு என்பது
'அன்னை விண்ணேற்பு அடைந்தார்' என்ற
மக்களது நம்பிக்கையின் மீது கட்டப்பட்ட
விசுவாசக் கோட்பாடாகும்
அன்னையின் விண்ணேற்பு பற்றிய நம்பிக்கை
கி.பி. 2 ஆம் நூற்றாண்டிலிருந்தே இருந்து வந்த ஒன்று
அன்னை மரியா எருசலேமில் தங்கியிருந்து இறந்து போனதாகவும்
எபேசு நகரில் மரணம் வரை யோவானோடு வாழ்ந்ததாகவும்
குறிப்புகள் கூறுகின்றன
அன்னையின் உடலைச் சீடர்கள் சிறப்பாக அடக்கம் செய்தனர்
தோமையார் தாமதமாக வந்து
அன்னையின் முகத்தைப் பார்க்க விரும்பினார்
கல்லறையைத் திறந்து பார்த்த போது
அன்னையின் உடல் கல்லறையில் இல்லை
அன்னையவர் உடலோடும் ஆன்மாவோடும்
விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார் என
பாரம்பரியம் நமக்குத் தெளிவுபடுத்துகிறது
அன்னையின் விண்ணேற்புப் பெருவிழாவைக் கொண்டாடும்
அவரது பிள்ளைகளாகிய நாம்
நமது வாழ்வு பற்றிச் சிந்திப்போம்
**"இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டது போன்று**
**நாமும் உயிர்த்தெழுவோம்" என**
**பவுலடியார் கூறுகிறார்**

ஆண்டவர் இயேசுவைப்போன்று, அன்னைமரியாவைப் போன்று
இறைவன் திருவுளப்படி நடக்கின்ற நாம் ஒவ்வொருவரும்
விண்ணக மகிமையைப் பெறுவோம் என்பது உறுதி.

**இன்றைய உலகில் அன்னை மரியாவின்**
**வாழ்க்கைப் பாதையில் தடம் பதித்து நாம் நடக்கின்றோமா?**
**நமது வாழ்க்கைச் சூழல்களில் பொறுமையைக் கடைபிடிக்கின்றோமா?**
**நம் குழந்தைகளிடமும் நம்மை அண்டி வருவோரிடமும்**
**நிறைந்த தாயன்புடனும் தியாக உணர்வுடனும்**
**நடந்து கொள்கின்றோமா?**
**நம்மை வருத்துவோரை மன்னிக்கின்றோமா?**
**நமக்கு வரும் சோதனைகளையும் சுமைகளையும்**
**தாங்கிக் கொள்கிறோமா? நம்மை நாமே பரிசோதனை செய்வோம்**

நமது இல்லங்களில் வாழும் அன்னையரைப்
பேணிப் பாதுகாப்போம் - அவர்களுக்குப்
பாசத்துடன் பணி செய்வோம்
பிறர் துன்பம் கண்டு இரங்கி அவர்களின் துயர் துடைப்போம்
மனித நேயமுடன் வாழ்ந்தால் இறையருள் பெறுவதோடு
அன்னையின் நிறை ஆசிரும் பெறுவோம்

## நம் நாடு

நமது அன்னையின் விண்ணேற்புப் பெருவிழாவினைக்
கொண்டாடும் இந்நாளிலேயே
நமது பாரத அன்னையின் சுதந்திரதின விழாவினையும்
கொண்டாடி மகிழ்கிறோம்

நம் தாய்நாடு ஞானம் நிறைந்த நாடு
மகாவீரர், புத்தர், இராமானுஜர் போன்ற மகான்களும்
நம் காலத்தில் வாழ்ந்த மகாத்மா காந்தயடிகளும்
மக்களை ஆன்மீகத்தில் வளர்த்தெடுத்தது நம் நாடு
சரித்திரம் போற்றும் பல மன்னர்களும் சான்றோர்களும்
நமது நாட்டை ஆண்டு வளம்பெறச் செய்துள்ளனர்

**“யாதும் ஊரே யாவரும் கேளிர்” – என்ற முதுமொழியின்படி**
**‘அனைத்து ஊர்களும் நமது ஊர்**
**அனைத்து மக்களும் நமது உறவினர்’ – என்னும்**
**பொதுமை உணர்வுடைய நாடு நம் நாடு**
**“எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் இங்கு**
**இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” – என்பதே**
**நாட்டின் நலன் தேடும் நல்லோரின் எதிர்நோக்கு**

பல நூற்றாண்டுகளாக அந்நியர் ஆட்சியில
அடிமைப்பட்டுக் கிடந்த நம் நாடு
1947, ஆகஸ்டு 15 ஆம் நாள்முதல் சுதந்திரம் பெற்ற நாடாகத் திகழ்கிறது





கல்வியில், அறிவியலில்,கணினியில், பொருளாதாரத்தில்
படை பலத்தில் சிறந்த வளர்ச்சி பெற்றுள்ளது
பல வளர்ச்சிகளால் நாம் பெருமைப்பட்டுக் கொண்டாலும்
முக்கிமான சிலவற்றில் பின்தங்கியுள்ளோம்
என்பதை மறுக்க முடியாது

**நம்மை வாட்டுவது வறுமை**
**நம்மைப் பிரிப்பது ஜாதி, மதம், இனம்**
**நம்மை வதைப்பது ஊழல்**

இம்மூன்றும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து
நம் நாட்டு வளர்ச்சியைத் தடுக்கிறது
வறுமைக்குக் காரணம் இல்லாமையல்ல; பகிராமையே

செல்வந்தர்களுக்கு சலுகைகள் அளிப்பது அநீதி
ஏழைகளுக்கு, சலுகைகள் மறுப்பது மாபாதகம்
**‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’**
மக்கள் வாழ அடிப்படைத் தேவை உணவு
உணவுப் பொருட்களை விளைவிக்கும் விவசாயிகள்
வறட்சியாலும் வறுமையாலும் நூற்றுக்கணக்கில்
தற்கொலை செய்து கொள்வதை அரசாங்கம் கண்டு கொள்கிறதா?
ஏய்ப்பதும் ஏமாற்றுவதும் ஏழைகளல்ல
செல்வந்தர்கள், பணமுதலைகள், வங்கிச் செயலாளர்கள்
அரசியலார் ஆகியோர் கோடி கோடியாகப் பணத்தை பதுக்கி வைத்து ஏமாத்துகின்றனர்
இதுவா நாம் பெற்ற சுதந்திரம்?

ஊழலில் மிதப்போருக்குத் தண்டனை வழங்காமல்
ஆண்டுக்கணக்கில் தீர்ப்புக்களைத் தள்ளிப் போடுவது
நீதித்துறையும் அரசியலாரும் சமூகத்திற்குச் செய்யும் அநீதி
மனித நேயம், பகிர்தல், நீதி, ஏழைகளுக்குச் சிறப்பு சலுகைகள் வழங்கல்
இவை நமது சமூகத்தை நிமிர வைக்கும், வாழவைக்கும்

**தேசியக் கொடியேற்றி நாட்டுப்பண் பாடுவது மட்டும்**
**நாட்டுப் பற்று ஆகாது**
**நலமிழந்தோரை வாழ்வித்து, நாட்டில்**
**சமாதானத்தையும், அமைதியையும், ஒற்றுமையையும்**
**நிலைநாட்டுவதே உண்மைச் சுதந்திரமும்**
**நாட்டுப் பற்றும் ஆகும்**

**விண்ணேற்புப் பெற்ற நம் அன்னை மரியா**
**நம் பாரத அன்னையின் துயர் விலங்குகளைத் தகர்த்தெறிந்து**
**நாடு உண்மைச் சுதந்திரம் பெற்று மகிழ்ந்து வாழ**
**நிறை ஆசிர் பொழிய மன்றாடுவோம்**

**அனைவருக்கும் அன்னையின்**
**விண்ணேற்புப் பெருவிழா வாழ்த்துக்களும்,**
**சுதந்திர தின விழா வாழ்த்துக்களும்**